Anbu Paalam

அன்புப் பாலம்

ஆண்டு - 17 இதழ் - 8 மே - 2023 தமிழ் மாத இதழ் விலை ₹ 30

Volume - 17 Issue - 8 May - 2023 Tamil Monthly Price ₹ 30

தமிழறிஞர்
ஔவை நடராசன்
சிறப்பிதழ்

பாலம் இதழின் விற்பனை வருமானம் முழுவதும் கல்விப்பணிக்கே!

Sairam INSTITUTIONS

MJF.LN. LEO MUTHU
Founder Chairman - Sairam Institutions



HANDING GREAT ENGINEERING CAREERS!

Sairam is one of the most respected and sought after engineering colleges of the country and has been ranked by the NIRF as one amongst the top 150 institutions of the country. Sairam takes great pride in producing some of the brightest engineering brains of the country. With a strong alumni base of over 17000 engineers spread across 75 countries and working for some of the leading MNCs of the world, Sairam is committed to creating a better world by creating great engineers!

Sairam has been securing the highest number of University Ranks amongst all Engineering Colleges of Tamilnadu consecutively for the last 4 years which is a testimony to the very high standards set by Sairam over the years.

We build a better nation through quality education!

Sai Prakash LeoMuthu, Chairman & CEO

Sri **SAI RAM**
ENGINEERING COLLEGE & INSTITUTE OF TECHNOLOGY
(ISO 9001-2015 Certified Institution)

Campus: Sai Leo Nagar, West Tambaram, Chennai - 600 044.

Administrative Office: "Sai Bhavan", 31B, Madley Road, T.Nagar, Chennai - 17.
Ph: 044-4226 7777. Fax: 044-4226 7779.
e-mail : sairam@sairamgroup.in
www.sairamgroup.in

www.sairam.edu.in | www.sairamit.edu.in

உள்ளே

» 5

» 8



» 12

» 19

» 22

» 24

» 37

» 42

» 44

» 46

» 48

» 53

அறிவிப்பு



ஜூன் 2023

கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ்

சிறப்பிதழுக்கான கட்டுரைகள், கவிதைகள், கதைகள், துணுக்குகளை சிறப்பிதழுக்கு முந்தைய மாதம் 15ஆம் தேதிக்குள், யூனிகோட் முறையில் anbupaalameditorial@gmail,com க்கு மின்னஞ்சல் செய்க

அரசுப் பள்ளியில் சேர்ப்போம் அன்பு குழந்தைகளை



➲ ச. விஜய் ஆனந்த் எம்.பி.ஏ., ஆசிரியர்

இதயக் குடிலில் குடியிருக்கும் இனிய வாசகர்களே, உதய ராகம் பாடும் – என் புத்திய வணக்கம்!

தேவையற்ற வீண் பெருமைக்கென்றும், மாற்றார் நம்மைப் பெரிதென நினைக்க வேண்டும் எனவும் தனியார் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பதை தவிர்ப்போம். தனியார் பள்ளிகளுக்கு செலுத்தும் பணத்தை அரசுப் பள்ளி மேம்பாட்டுக்கு அளிப்போம். அப்பணத்தைக் கொண்டு குழந்தைகளுக்கு பொது அறிவு நூல்களை அதிகமாக வாங்கிக் கொடுக்கலாம். சத்து நிறை உணவை குழந்தைகளுக்கு வாங்கி வழங்க முடியும். நல்ல ஆடைகளை வாங்கித் தர இயலும். சுற்றுப்பயணம் அழைத்துச் செல்ல வாய்ப்பு அமையும். இவையெல்லாம் குழந்தைகளின் மன மகிழ்ச்சியை அதிகரிக்கும். கற்றலை வளப்படுத்தும்.

ஆயிரக்கணக்கில் தனியார் பள்ளிகளில் செலவிட்டு, அதற்காக கடும் உழைப்பை சிந்தி உளவியல் பிரச்சனைகளால் பல பெற்றோர்கள் சண்டையிட்டுக் கொண்டு வாழ்வது சீரழிவு என உணர்ந்து செயல்படுவோம். பல முன்னேறிய நாடுகளிலும் கல்வி, அரசு சார்ந்தே இருக்கிறது. போலி பந்தாவும் பகட்டும் தவிர்ப்போம். அர்ப்பணிப்பு உணர்வுடன் இயங்கும் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் பலர் இருக்கின்றனர். தமிழால் உயர்ந்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள் பல துறைகளில் பணியாளர்கள் என அனைவரும் தங்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை தனியார் பள்ளிக்கு அனுப்ப நினைப்பது தாழ்வு மனப்பான்மையே. அரசுப்பள்ளிகள் வளர்ந்தால் பல தனிநபர் நன்மைகள் மலரும்.

வாழ்நாள் ஊதியம் முழுவதும் செலவழித்து ஆங்கில வழியில் படிக்க வைத்தவர்களின் குழந்தைகளில் பலரும், பைசா செலவில்லாமல் அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுடன் தான் கல்லூரியில் படிக்கின்றனர். குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்ப்போம்; அரசின் பிள்ளைகளாக வளரட்டும். குழந்தைகள் நாளை நல்ல குடிமகன்களாக வாழ வழிகாட்டும் பயிற்சிப் பட்டறையே அரசுப் பள்ளிகள். ●

எனது ஆசான் ஔவை



➲ பத்மஸ்ரீ
பாலம் பா. கலியாணசுந்தரம்

1957ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளி படிப்பை முடித்தேன். அடுத்த ஆண்டு, பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் புதுமுக வகுப்பில் சேர்ந்தேன். இப்போதுள்ள பிளஸ் டு, அப்போது கல்லூரியில் புதுமுக வகுப்பாக இருந்தது. தமிழ் மீது கொண்ட ஆர்வம் காரணமாக சிறப்புத் தமிழைப் பாடமாக எடுத்து படித்தேன். மறு ஆண்டு, பி.ஏ., தமிழ் வகுப்பில் சேர விரும்பினேன். அதற்கேற்றார் போல், அந்த ஆண்டு பி.ஏ., தமிழை அறிமுகப்படுத்தினார்கள். ஆனால், என்னைத் தவிர வேறு யாரும் தமிழ் வகுப்பில் சேராததால் பி.ஏ., தமிழ் வகுப்பு தொடங்குவதை தவிர்த்துவிட்டனர். அருகிலிருந்த மதுரை திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரியில் தமிழ் வகுப்பு இருந்ததால்

சென்னையில் பாலம் நிறுவனத்தை தொடங்கியபோது அதில் பங்கேற்று சிறப்பித்தார். சான்றோர்களுக்கும் மக்களுக்கும் என்னை அறிமுகம் செய்துவைத்தார். கோட்டையில் அவர் தமிழ் வளர்ச்சித் துறை செயலாளராக இருந்தபோது தமிழ் வளர்ச்சி தொடர்பாக எனது கருத்துக்களை சொன்னேன். ஒரு துறையில் செயலாளர் இருக்கவேண்டும். ஆனால், அவர் இந்திய ஆட்சிப் பணி தேர்வெழுதி வெற்றி பெற்றிருக்கவேண்டும். I.A.S அதைப் படிக்காமலேயே ஒரு துறையில் செயலாளராக இருந்தது ஔவை நடராசன் அவர்கள் மட்டுமே!

அங்கு சேர்ந்தேன். ஆனால், சில நாள்களிலேயே அங்கு படித்துக்கொண்டிருந்த இரண்டு மாணவர்களும் வெவ்வேறு பாடப் பிரிவிற்கு சென்றதால், மீண்டும் நான் ஒரு மாணவன் ஆனேன். அதனால், அங்கும் வகுப்பை மூடிவிட்டார்கள்.

எனது சகோதரர் மதுரை தியாகராயர் கல்லூரியில் என்னைச் சேர்த்தார். அங்கு நிறைய மாணவர்கள் தமிழ்ப் படித்தனர். ஏனெனில், ஔவை துரைசாமி பிள்ளை, அ.கி.பரந்தாமனார், ராசமாணிக்கனார், இலக்குவனார், மே. சுந்தரம், சுபா அண்ணாமலை போன்ற புகழ் வாய்ந்த பேராசிரியர்கள் ஒருங்கே அங்கே பணிப்புரிந்தனர்.

மதுரை தியாகராயர் கல்லூரியில் 1959ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை பி.ஏ., தமிழ் படித்தேன். தமிழ் படிக்கும் ஆர்வத்தில் இரண்டு கல்லூரியில் வாய்ப்பை இழந்தாலும் மூன்றாவது கல்லூரியாக தியாகராய கல்லூரிக்கு வந்ததால் அனைத்து ஆசிரியர்களும் என்னிடம் பிரியமாக இருந்தார்கள். பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்கள் தான் ஆசிரியர்களில் வயதில் மூத்தவர். கல்லூரியை நிறுவிய தியாராசன் செட்டியாரின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர். தமிழ் இலக்கியங்களை கசடறக் கற்றவர். அவர் நாற்காலியில் அமர்ந்துகொண்டு பாடம் நடத்துவது ஒரு தனி அழகு ஆகும். தியாகராசன் செட்டியார் தன் மனைவி ராதாவிற்கு வீட்டிற்கு வந்து தமிழ் சொல்லிக்கொடுக்க விரும்பினார். அவ்வாறே, ஔவையார் அவர்கள் ராதா தியாகராசனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்து அவரை பழைமை மிக்க தமிழ்ப் பெண்மணியாக ஆக்கினார். அவர்கள் பிற்காலத்தில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஔவைதுரைசாமி அவர்கள் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும்போது ஒரு முறை என்னை உதாரணமாக சொன்னார். ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு குறிக்கோளுடன் வாழ வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை பயனற்றது. ஒரு நோக்கத்தில் வாழ்க்கையில் நடைபோடும் போது என்ன இடையூறு ஏற்பட்டாலும், என்ன இழப்பு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தக் கூடாது. தம்பி கலியாணசுந்தரம் இரண்டு கல்லூரியில் தமிழ் படிக்கும் வாய்ப்பை இழந்தாலும், விடாமுயற்சியுடன் இங்கு வந்து சேர்ந்தார். இம்மாணவரைப் பற்றி செட்டியார் தெரிந்துகொண்டதும் அவரது கல்வி செலவு அனைத்தையும் ஏற்றுக்கொண்டார். இவ்வாறு வாழ்க்கையில் தொடர்ந்து குறிக்கோளுடன் நடந்தால் வெற்றி நிச்சயம். இம்மாணவர் எதிர்காலத்தில் பல வெற்றிகளைப் பெற்று புகழ் வாய்ந்த மனிதனாக வருவார் என்று மற்ற மாணவர்களிடம் சொன்னார். இன்று பத்ம ஸ்ரீ, மகுடம் விருதுகளைப் பெற்றபோது அவர் சொன்ன வார்த்தைகள் எவ்வளவு உண்மை ஆகின!

தியாகராயர் கல்லூரியில் மூன்றாம்

ஆண்டு படித்துக்கொண்டிருக்கும் போது ஒரு துடிப்பான இளைஞர் தமிழ்த் துறையில் சேர்ந்தார். மேடையில் நாற்காலி இருந்தாலும் அதில் அமராமல் நின்றுகொண்டே பாடம் நடத்துவார். தமிழ் சொற்கள் அருவி போல் பாயும். அவர் பாடம் நடத்தும் விதம் மாணவர்கள் அனைவருக்கும் பிடித்திருந்தது. அவர் வேறு யாருமில்லை; பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்களின் மகன் ஔவை நடராசனார். இவ்வாறு தந்தையாரிடம் மூன்று ஆண்டுகளும் மகனாரிடம் ஓராண்டு கல்வி பெற வாய்ப்பு கிடைத்தது.

படித்து முடித்ததும் சென்னை பல்கலைக்கழகத்தில் நூலகத் துறை சான்றிதழ் படிப்பில் சேர்ந்து படித்தேன். தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டம் அருள்மிகு குமரகுருபரர் கல்லூரியில் நூலகராக பணியில் சேர்ந்தே. பல வருடங்கள் எனது ஆசான் ஔவை நடராசன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பை பெறவில்லை.

எந்த ஊருக்கு நான் சென்றாலும் அந்த ஊரில் எனக்கு பாடம் சொல்லிக்கொடுத்த ஆசிரியர் இருந்தால் அவரை தவறாமல் சந்தித்து வாழ்த்துப் பெறுவது வழக்கம்.

அவ்வாறே சென்னைக்கு வரும்போதெல்லாம் அண்ணா நகரில் உள்ள ஔவை நடராசன் அவர்களைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தேன். அவர் பிறந்தநாள் தோறும் அவரிடம் நான் வாழ்த்து பெறுவது வழக்கம் ஆகும். ஊதியம் முழுவதும் நான் மக்களுக்கு அளிக்கும் செய்தியை அறிந்து என்னை வெகுவாகப் பாராட்டினார்.

சென்னையில் பாலம் நிறுவனத்தை தொடங்கியபோது அதில் பங்கேற்று சிறப்பித்தார். சான்றோர்களுக்கும் மக்களுக்கும் என்னை அறிமுகம் செய்துவைத்தார்.

கோட்டையில் அவர் தமிழ் வளர்ச்சித் துறை செயலாளராக இருந்தபோது தமிழ் வளர்ச்சி தொடர்பாக எனது கருத்துக்களை சொன்னேன். ஒரு துறையில் செயலாளர் இருக்கவேண்டும். ஆனால், அவர் இந்திய ஆட்சிப் பணி தேர்வெழுதி வெற்றி பெற்றிருக்கவேண்டும். *I.A.S* அதைப் படிக்காமலேயே ஒரு துறையில் செயலாளராக இருந்தது ஔவை நடராசன் அவர்கள் மட்டுமே!

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அப்போது, தமிழ்ப் பல்கலைக்கழக செயல்பாடுகள் உலகெங்கும் ஒலித்தது. ஒரு மொழிக்கான பல்கலைக்கழகத்தை மிகச் சிறப்பாக நடத்திய பெருமை அவரையே சாரும்.

பொதுவாக, தமிழறிஞர்கள் பிற மொழிகளில் புலமை பெறுவதில்லை. ஆனால், எனது ஆசான் ஔவை நடராசன் அவர்கள் ஆங்கிலத்தில் மிகுந்த புலமை பெற்றவர். ஆசிரியர்களில் மிகச் சிலரே நிர்வாகத்திலும் சிறப்பாக செயல்படுவர். எனது ஆசான் அவர்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக துணை வேந்தர், தமிழ் வளர்ச்சித் துறை செயலாளர் போன்ற பெரும் பொறுப்புகளில் முத்திரை பதித்தவர்.

ஔவை அவர்கள் எல்லோருக்கும் பொது மனிதராக இருந்தார். அனைவருக்கும் பிடித்த வகையில் நடந்துகொண்டார். டாக்டர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., புரட்சி தலைவி ஜெயலலிதா அவர்கள் ஆகிய மூன்று முதலமைச்சர்களிடத்திலும் மதிப்பு மரியாதையும் பெற்றவர். அதனால் தான், மூன்று முதலமைச்சர்கள் ஆட்சி நிர்வாகத்தில் பெரும் பொறுப்புகளை அளித்தும் கௌரவித்தனர். இதுவே இவரது திறமைக்கு சான்றாகும்.

ஒரு குடும்பத்தில் தந்தை புகழ் வாய்ந்தவராக இருப்பார். ஆனால், மகனோ யாருக்கும் தெரியாதவராக இருப்பார். பேராசிரியர் ஔவை துரைசாமி தமிழ் இலக்கியங்களில் முடிசூடா மன்னராக இருந்தார். அவர் மகன் ஔவை நடராசன் அவர்களோ தமிழ்ப் பேராசியராக மட்டுமல்லாமல் ஆட்சி நிர்வாகத்திலும் சிறந்து விளங்கினார். என்னுடைய ஆசானின் மகன் ஔவை அருள் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக அப்பாவுக்கு பிள்ளைத் தப்பாமல் அனைவரும் பாராட்டும் விதமாக செயல்படுகிறார்.

வாழையடி வாழையாக மூன்று தலைமுறையாக புகழ் வாய்ந்த குடும்பமாக எனது ஆசான் குடும்பம்! ●

சினிமா வரலாறு

பாலிவுட் நடிகர் அம்ஜத்கான்

அம்ஜத்கான் அத்தோடு நிற்காமல் தம் சகோதரருடன் சேர்ந்து நாடக நடிகராகவும் திகழ்ந்தார். அத்துடன் Actors Guild Association தலைவராகவும் திகழ்ந்தார்.

குடும்பம்

அம்ஜத்கான் 1972ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார். அவருடைய மனைவியின் பெயர் ஷைலாதான். மணமான தம்பதிகளுக்கு ஷதாப்கான், அஸ்லாம் கான் மற்றும் ஷிமாப் கான் என மூன்று குழந்தைகள்.

1951ஆம் ஆண்டு குழந்தை நட்சத்திரமாக அம்ஜத்கான் நஜ்னீன் என்ற படத்தில் அறிமுகமானார்.

ஷோலே 1975

கலைஞர்கள்: தர்மேந்திரா, சஞ்சீவ் குமார், ஹேமமாலினி, அமிதாப் பச்சன், ஜெயா பாதுரி, அம்ஜத்கான், இஃதேகர், சத்யன் கப்பு ஆகியோர் நடித்த இப்படத்தின் ஒளிப்பதிவாளர் த்வாரகா த்வேசா.

படத்தொகுப்பு: எம்.எஸ்.ஷிண்டே.

விநியோகம்: சிப்பி ஃபிலிம்ஸ்

பிறப்பும் வளர்ப்பும்

மும்பையில் ஜெயந்த் என்ற நடிகர் வசித்து வந்தார். அவருக்கு 1940ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் நாளில் ஓர் ஆண் குழந்தை மூக்கும் முழியுமாய் ஸ்பென்சர் கம்பெனி கேக் போல் பிறந்தது. அவர் தம் குழந்தைக்கு அன்பாய், ஆசையாய் அம்ஜத்கான் எனப் பெயர்ச் சூட்டினார். அம்ஜத்கான் தம்பியின் பெயர் இம்தியாஸ் கான். அவரும் நடிகர்தான்.

படிப்பு

மும்பை பாந்த்ரா என்ற பகுதியில் உள்ள செயிண்ட் ஆண்ட்ரூஸ் என்ற உயர்நிலைப் பள்ளியில் அம்ஜத்கான் படித்தார். பிறகு R.D.நேஷனல் காலேஜில் படித்தபோது மாணவர் அமைப்பின் பொதுச் செயலாளராக செயல்பட்டார். பள்ளி மற்றும் கல்லூரி நாள்களில் அம்ஜத்கான் மாணவர் அமைப்பின் பொதுச் செயலாளராக செயல்பட்டார்.



➲ சிறந்த பத்திரிகையாளர்
சேலம் சங்கர் M.A., SIFDA.,

இசை: R.D.பர்மன்

பாடல்கள்: ஆனந்த் பக் ஷி

"ஏ தோஸ்தி ஹம் நஹீன் தோடேங்கே
தோடேங்கே தம் மகர்
தேரா சாத் நே சோடேங்கே"

பாடலின் பாடகர்கள்: கிஷோர் குமார் மற்றும் மன்னா டே.

"ஹோலி கே தின் தில் தில் ஜாதே ஹைன்
தூங்கி மை கலீ அரே ராமு கிசாலீ"

பாடலைப் பாடியவர்கள்: கிஷோர் குமார் மற்றும் லதா மங்கேஷ்கர்.

"ஜப் தக் ஆஹை ஜான் ஜானே ஜஹான் மை
நாச்சூங்கி ஹூன்"

பாடலின் பாடகர் லதா மங்கேஷ்கர்.

"மெஹ்பூபா மெஹ்பூபா
ஹூ மெஹ்பூபா மெஹ்பூபா
குல்ஷான் மேன் குல் கில்தே ஹைன்
ஜப் சேஹ்ரா மே மில்தே ஹைன்"

பாடலைப் பாடியவர் ஆர்.டி.பர்மன்.

"கோயி ஹசீனா ஜப் ரூத் ஜாதி ஹை தோ
ஒளர் பீ ஹசீன் ஹோ ஜாதி ஹை"

பாடலின் பாடகர் கிஷோர் குமார்.

ஷோலே திரைப்படம் மாபெரும் வெற்றிப் படம். வசூல் மழை கொட்டியது!

அம்ஜத்கான் ஷோலே படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு 'பர்வரிஸ்', 'இன்கார்', 'ஆஃபத்', 'தேஷ் பர்தேஷ்', 'ராம் கசம்', 'மீரா', 'லகான்', 'லூட் மார்', 'குர்பானி', 'லவ் ஸ்டோரி', 'லாவரிஸ்', 'காலியா', 'டயல் 100', 'தீஸ்ரீ ஆங்க்', 'தௌலத்', 'மொஹம்மத்', 'கலா சுராஜ்', 'விக்ரம்', 'கப்ரஸ்தான்', 'பீஸ் சால் பாத்', 'இஜ்ஜத்', 'ஆத்னக்' போன்ற எண்ணற்ற படங்களில் நடித்து புகழ் பெற்றார்!



முகாதர் கா சிக்கந்தர் 1978

கலைஞர்கள்: அமிதாப் பச்சன், வினோத் கண்ணா, ராக்கி, ரேகா, ரஞ்சித், நிருபா ராய், அம்ஜத்கான் மற்றும் காதர் கான்.

இசை: கல்யாண்ஜி ஆனந்த்ஜி

பாடல்கள்: அஞ்சான்

விநியோகம்: பிரகாஷ் மெஹ்ரா புரொடக் ஷன்ஸ்.

"ஜிந்தகி தோ பெவாஃபா ஹை ஏக் தின் துகராயேகி
மௌத் மெஹ்பூபா ஹை"

பாடலைப் பாடியவர் மொஹம்மத் ரஃபி.

"ரோதே ஹூயே ஆதே பெவாஃபா ஹை ஏக் தின் துக்ராயேகி
மௌத் மெஹ்பூபா ஹை"

பாடலின் பாடகர் கிஷோர் குமார்.

"தில் தோ ஹை தில் தில் கா ஐத்பார் க்யா கீஜே
ஆ கயா ஜோ கிஸீ பே ப்யார் க்யா கீஜே"

பாடலைப் பாடியவர் லதா மங்கேஷ்கர்.

"ப்யார் ஜிந்தகி ஹை ப்யார் பந்தகி ஹை
பைந்தகி ஹை"

பாடலின் பாடகர்கள் மகேந்திர கபூர், ஆஷா போஸ்லே மற்றும் லதா மங்கேஷ்கர்.

"சலாமி இஸ்க் மேரி ஜ ரா குபுல் கர் லோ
தும் ஹம்சே ப்யார் கஹானே கி ஜரா சீ புல் கர் லோ"

பாடலைப் பாடியவர்கள் லதா மங்கேஷ்கர் மற்றும் கிஷோர் குமார்.

"ஓ சாதீரே... தேரே பினா பீ க்யா ஜீனா
தேரே பினா பீ க்யா ஜீனா"

பாடலின் பாடகர் கிஷோர்குமார்.

"வஃபா ஜோ ந கி தோ ஜஃபா பீ ந கிஜே

சிதம் ஜனேமண் இஸ் தரஹ் பீ ந கிஜே"

முகாதர் கா சிக்கந்தர் படத்தின் கதை வசனம்: காதர் கான், விஜய் கௌல் மற்றும் லக்ஷ்மிகாந்த் ஷர்மா.

முகாதர் கா சிக்கந்தர் படம் அம்ஜத்கானிற்கு மாபெரும் வெற்றிப் படமாகும்.

தாதா 1979

கலைஞர்கள்: வினோத் மெஹ்ரா, பிந்தியா கோஸ்வாமி, அம்ஜத்கான், ஜீவன், ரஷா, முரத், ஜெகதீப்.

இசை: உஷா கிருஷ்ணா

கௌஹர் கான்பூரி எழுதிய

"அல்லா கரம் கர்னா

மௌலா து ரேஹம் கர்னா"

பாடலைப் பாடியவர் சுமன் கல்யாண்பூர்.

"தில்கே துகடே துகடே கர்கே

முஸ்குராகே சல் தியே"

பாடலை ரவீந்திர ஜெயின் எழுத, யேசுதாஸ் பாடினார்.

"காடி ஜன்டி ஏ சலேங்கே மார் தீ

மை ஹூன் யாத் ஆயே மேரே யார் தீ"

என்ற ரவீந்திர ஜெயின் எழுதிய பாடலைப் பாடியவர்கள் மொஹம்மத் ரஃபி, தில்ராஜ் கௌர், ஹேமலதா மற்றும் சைலேந்திரா சிங்.

"பர்தே மே கோயி பைதா ஹை பர்தா கர்கே

அல்லா மைன் சட்கே காவூன் ஐஸீ நஜர் கே"

பாடலை ரவீந்திர ஜெயின் எழுத, மொஹம்மத் ரஃபி மற்றும் சைலேந்திர சிங் பாடினர்.

"ஹம்னே மனா ஹம் பே சாஜன் ஜோபன்வா பர்பூர் ஹை

ஏ தோ மஹிமா ராம் கி ஜ மே ஹேமரா கா கஸர் ஹை"

தாதா படம் தயாரிப்பு மற்றும் இயக்கம்: ஜீதல் கிஷோர்.

தாதா படத்தில் நடித்த அம்ஜத்கானுக்கு சிறந்த துணை நடிகருக்கான ஃபிலிம் ஃபேர் விருது கிடைத்தது.

அம்ஜத்கான் நடித்த தாதா படமும் அவருக்கு வெற்றிப் படமாய் அமைந்தது.



மா கசம் 1985

கலைஞர்கள்: மிதுன் சக்ரவர்த்தி, ஷரத், அம்ஜத்கான், திவ்யா ரானா, ரஞ்சித், ஷரத், சக்சேனா, பிரான், குட்டி மாருதி, சுஷ்மா சேத் மற்றும் ராம் மோகன்.

இசை: பப்பி லஹரி

பாடல்கள்: ஃபரூக் கைசர்

"பிங்கோ பிங்கோ பிங்கோ

மைன் ஹூன் பிங்கோ'

பாடலைப் பாடியவர்கள் முன்னா அஜீஸ், பார்வதி கான் மற்றும் விஜய் பெனடிக்ட்.

"ஏக் தோ தீன் ஆரே ஆரே ஆரே

துனியா ஹசீன் ஆரே ஆரே ஆரே"

பாடலின் பாடகர்கள் அமித் குமார் மற்றும் மன்ஹர் உதாஸ்.

"ஏக் கம்சின் கச்சீ குவாரி கலி

நா ஜோன் கீ பாலீ சச்சே பாலி"

பாடலைப் பாடியவர்கள் முன்னா அஜீஸ், பார்வதி கான் மற்றும் விஜய் பெனடிக்ட்.

"ஜப்சே துஜ்கோ தேகா ஹைன் ப்யார் ஹோ கயா

தூ லே யா ந லே தில் தையார் ஹோ கயா"

பாடலின் பாடகர்கள் மன்ஹர் உதாஸ் மற்றும் எஸ்.ஜானகி.

"ராஜா ஜி ராஜா ராஜா ஜீ

ஜித் கயீ மைன் தில் கீ பாஜி"

பாடலைப் பாடியவர் உத்ரா கெல்கர்.

1985ஆம் ஆண்டு அம்ஜத்கான் சிறந்த நடிகருக்கான ஃபிலிம் ஃபேர் விருதைப் பெற்றார்.

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் மெஹ்பூபா பாடல் புகழ் அம்ஜத்கான் மாரடைப்பால் தம் 51ஆம் வயதில் மரணமடைந்த போது அகில இந்திய திரையுலக ரசிகர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர்! மெய்தான்... ஒட்டுமொத்த திரையுலக ரசிகர்களின் உதடுகள்... "மெஹ்பூபா மெஹ்பூபா..." என்ற பாடலை முணுமுணுத்துக்கொண்டே இருந்தன!

படச்சுருள் சுருளும்...

வாழ்த்துக்கள்

STEERING QUALITY EDUCATION
AMET
UNIVERSITY

AMET பல்கலைக்கழகம்

இந்தியாவின் சிறந்த கடல்சார் பல்கலைக்கழகம்

கானாத்தூர்
சென்னை - 603112

முனைவர் ஜே. இராமச்சந்திரன்
நிர்வாக அறங்காவலர்

AMET பல்கலைக்கழகம்

இமயமாய் உயர்ந்தோங்கிய எங்கள் அப்பா!



எங்களோடு ஒருவராக என்றும் பழகி,
எந்தக் கவலையும் இல்லாமல் எந்தையார்
எப்போதும் பரிவின் வடிவமாய் வாழ்ந்தவர்!
தன்னை நினையாமல்,
பிறர் நலம்; பிறர் வளத்தையே நினைத்தவர் என் அப்பா.
ஒருவர் இருவர் இல்லை
ஒரு நாளைக்குப் பலர் எனப் புலவர் கூட்டம்!
விருந்துண்ண எங்கள் தாரகை வீடு,
அருந்தமிழ் உணவின் அகமாகவே அமைந்தது!
அப்பா எங்கள் மூவரையும் (கண்ணன், அருள், பரதன்)
தாம் பெற்ற வரங்கள் என்பார்; மூவேந்தர் என்பார்,
முடிவுரை மூவேந்தர் என்றும் போற்றி பெருமைப்படுத்துவார்.
நாங்கள் எந்த வகுப்புப் படிக்கிறோம் என்று கூட எப்போதும் வினவ மாட்டார்.
உரிமை தருவதில் அப்பாவுக்கு நிகர் அப்பாவே தான்!
எல்லையில்லாத உரிமை எதிலும் தருவார்.

அப்பாவிடத்தில் எப்போதும் எதைச் சொல்லவும்
நாங்கள் மூவரும் அஞ்சியதில்லை.
அப்பா எங்களுக்குப் புகழ் பெற்றுத் தந்த பொன்னெழுத்து.
எங்களை அவரவர் போக்கில் அவரவர் வளரட்டும்
என்று எப்பொழுதும் மனத்தில் ஒரு சிந்தனைத் தனிமையிலேயே இருந்து மறைந்தவர் எங்கள் அப்பா!
இன்றுவரை ஏன் என்றும் புகழில் நிலைக்கின்றார் !
எல்லாத் துறையிலும் முதலில் நிற்க வேண்டும்;
எவர் துணையும் இல்லாமல் இமயமாய் நிமிரவேண்டும் என்று ஓயாமல் சொல்வார்.
தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது
என்ற திருக்குறளை எப்போதும் சுட்டிக் காட்டுவார்.
அப்பாவுக்கு எங்களை அயல் நாட்டிற்கு அனுப்பவே ஆசை.
'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' என்று பாரதியார் சொல்வதை நல்வழி என்பார்.
அப்பாவின் பார்வையில் நாங்கள் மூவரும்
மெகஸ்தனிஸ், யுவான் சுவாங், வாஸ்கோடகாமா தான்.
நாங்கள் மூவரும் துறை வேறுபட்டவர்களானோம்.
முறை வேறுபட்டதில்லை!
தாய்-தந்தை எங்களுக்குத் தண்டவாளமாய் அமைந்ததால்
நாங்கள் மூவரும் பாதை மாறாமல் பயணம் செய்கிறோம்!
இரண்டு இமயங்களின் திருவடிகளை எப்போதும் தொட்டபடியே வணங்கிச் செல்கின்றோம்.
உங்களை இரண்டு கண்களாய் இமை கூப்பி வணங்குகிறோம்.
உங்கள் சாதனையை போதனையாய் எண்ணி நாள்தோறும் நடக்கிறோம்.
நாங்கள் உங்களைப் போல் வாழ வேண்டும் புகழோடு! ●

கலைமுத்துக் களஞ்சியம்

➲ தொகுப்பு:

கலைச்செல்வி லியோமுத்து

1. தகுதியில்லாதவனைப் புகழ்தல், கள்ளச் சந்தையில் ஒரு பொருளை விற்பதற்குச் சமம்.

   - சீன முதுமொழி

2. சிந்திக்கும் ஆற்றலைக் கொண்டு தான் மனிதத் தன்மையை அளவிட முடியும்.

   - டக்ளஸ் டுப்ளே

3. ஒருவனின் வாய்ப்பேச்சைக் காட்டிலும் அவனது மௌனம் அதிக எண்ணங்களைப் பிரதிபலிக்கும்.

   - ஷேக்ஸ்பியர்

4. செய்த தவறை ஏற்பதே தன்மானத்தின் சிகரமாகும்

   - காந்தியடிகள்

5. சோம்பேறிகளை இந்தக் காலத்தில் பலர் ஞானி என்று தப்புக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள்

   - தோரே

6. தெளிவான பேச்சு தூய்மையான உள்ளத்தின் எதிரொலி

7. மூட நம்பிக்கை, மனித அறிவை கண்ணுக்குத் தெரியாத சங்கிலியால் இணைத்துள்ளது

   - இங்கர்சால்

8. எண்ணம் திருந்தினால், எல்லாம் திருந்தும். அதுதான் அடிப்படை

9. பொறுமை மிகவும் கடினமானது தான். ஆனால் அதன் விளைவு மிகவும் இனிமையானது

10. உன் ஓட்டு ஒரு யோக்கியனுக்கு விழுந்தால் உன் எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது. அயோக்கியனுக்கு விழுந்தால் அவன் எதிர்காலம் காப்பாற்றப்படுகிறது

   - கண்ணதாசன் ●

தமிழறிஞர்

ஔவை நடராசன்

➲ முத்தமிழ் வித்தகர் சேலம் சங்கர் எம்.ஏ.,

பிறப்பும் வளர்ப்பும்:

பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் 1936ஆம் ஆண்டு விழுப்புரத்திற்கு அருகேயுள்ள ஔவைக் குப்பம் என்ற கிராமத்தில் பிறந்தார். வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த செய்யாறு என்ற சிற்றூரில் ஏப்ரல் 24ஆம் நாளன்று பிறந்தார். பெற்றோர் ஔவை துரைசாமியும், லோகாம்பாளும் மூக்கும் முழியுமாய் ஸ்பென்சர் கம்பெனி கேக் போன்று பிறந்த தம் குழந்தைக்கு அன்பாய், ஆசையாய் நடராசன் எனப் பெயர்ச் சூட்டினர்.

குடும்பம்:

பேராசிரியர் ஔவை நடராசனின் மனைவி பெயர் டாக்டர் தாரா. பேராசியர் ஔவை நடராசன் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். முதல் மகனுக்கு கண்ணன் எனப் பெயரிட்டார். அவர் மருத்துவர். பேராசிரியர் ஔவை நடராசனின் இரண்டாவது மகன் அருள் எனப் பெயர். தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராகப் பணியாற்றுகிறார். ஔவை நடராசன் தம் மூன்றாவது மகனுக்கு பரதன் எனப் பெயர்ச் சூட்டினார். அவரும் மருத்துவர்.

பேராசிரியரின் சகோதரர்கள் – சகோதரிகள்:

பேராசிரியர் ஔவை நடராசன் அவர்களுடன் உடன்பிறந்த சகோதரர்கள் 4 பேர். சகோதரிகள் 4 பேர். பேராசிரியர் ஔவை நடராசன் அவர்களின் ஒப்பற்ற குடும்பம்... நல்லதோர் பல்கலைக்கழகமாய் மிளிர்ந்தது!

சேலம் சௌடேஸ்வரியம்மன் கூடம்:

சேலம் மாநகரில் தகைசால் குகைப் பகுதியில் சௌடேஸ்வரியம்மன் கூடம் அமைதியான பூங்காவின் நடுவே அமைந்திருந்த மடாலயம் ஆகும். நறுமணம்

கமழும் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி அவ்வட்டாரம் முழுக்க நறுமணத்தை வாரி இறைக்கும்!

அம்மடத்தின் பக்கவாட்டில் உள்ள மற்றொரு குட்டிக் கூடத்தில் 'பங்கா' என்றழைக்கப்படும் சாதனம் முன்னும் பின்னும் அசைந்து குளிர்ச்சியான காற்றை வீசும்.

ஆமாம், அந்த சௌடேஸ்வரி அம்மன் மடாலயத்தில் தான் எங்கள் வட்டாரத்தின் ஒப்பற்ற திருக்குறள் சங்கம் இயங்கி வந்தது. திருவாளர் திருக்குறள் இ. ராமசாமி என்பவரின் ஒப்பற்ற தலைமையில் எண்ணற்ற இலக்கிய சொற்பொழிவுகளும், ஆய்வரங்குகளும், பட்டிமன்றங்களும் நடத்தப்பட்டு வந்தன!

தமிழகத்தின் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை, உலக ஊழியனார், பேராசிரியை காமாட்சி குமாரசாமி, திருமதி மண்டோதரி கணேஷ், ஔவை துரைசாமி, தேவநேயப் பாவாணர் போன்ற தமிழகத்தின் தலைச்சிறந்த மொழி வல்லுநர்களும், சிலம்பொலி செல்லப்பன் போன்ற மாபெரும் சொற்பொழிவாளர்களும், பேராசிரியர் ஔவை நடராசன் போன்றவர்களும், குன்றக்குடி அடிகளார், கிரிதாஸ் பிரசாத், கிருபானந்த வாரியார் போன்ற மாமேதைகள் எண்ணற்றோர் கூடி உரையாற்றிய ஒப்பற்ற மாமன்றம் தான்... எங்கள் சௌடேஸ்வரி அம்மன் மடாலயம்!

அன்று, சின்னஞ்சிறு பள்ளிப் பருவத்தில் எனக்கு அறிவமுதம் ஊட்டிய எங்கள் சௌடேஸ்வரி அம்மன் மடாலயம் எனக்கு அறிவுப் பாலூட்டிய 'நற்றாய் ஆவாள்!'

ஒப்பற்ற அந்த சௌடேஸ்வரி அம்மன் மடாலயத்தில் என்னுடைய பள்ளிப் பருவத்தில், இளைஞராகத் திகழ்ந்த ஔவை நடராசன் அவர்களின் பட்டிமன்ற உரையையும் கேட்டு ரசித்திருக்கிறேன். அவருடைய தந்தை ஔவை துரைசாமி அவர்களின் ஆராய்ச்சி உரையையும் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

'The Fire on Paris!'

ஔவை துரைசாமி அவர்கள் அவை நடுவே உரையாற்றுவதற்காக அமர்ந்திருக்கும் வேளையில், பள்ளிச் சிறுவனாய் நான் சொற்பொழிவைக் கேட்டு ரசிப்பதற்காக அமர்ந்திருந்தேன். அறிஞர் ஔவை துரைசாமி அவர்களுடைய கரத்திலிருந்த புத்தகத்தின் மேல் அட்டையில்... ஃபிரான்ஸ் மாநகரம் தீப்பிளம்புகளோடு தகதகவென்று கொழுந்துவிட்டு எரிந்துக்கொண்டிருந்தது! எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு... நான் என் இளம் வயதில் கண்ட அக்காட்சி... இன்றும் என் விழித்திரையில் தீப்பிளம்பாய் சுடர்விட்டுக்கொண்டே இருக்கிறது!

அதுமட்டுமன்று! அப்பேரறிஞர் ஔவை துரைசாமி மட்டுமன்று, அவரது கட்டிள்ம் காளையாகத் திகழ்ந்த பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் பட்டிமன்றத்தில் அமர்ந்து எதிரணியினருடன் சண்ட மாருதமாய் விவாதித்துக் கொண்டிருந்தார்!

பேராசிரியர் ஔவை நடராசனின் வாதம்:

சமுதாயத்தையே சீரழிக்கும் புல்லுருவியாகத் திகழும் ஒரு தீயவனால் ஒட்டுமொத்த சமுதாயமே சீரழிகிறது! என்ற தம் வாதத்தை நிரூபிப்பதற்காக பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் எடுத்துக்காட்டாக, ஹிட்லர், முசோலினியை கூறியதோடு நிற்காமல்... மற்றொரு சான்றாக ஒரு மாபெரும் மாம்பழக் கூடையில் வைக்கப்பட்டுள்ள சேலத்து மல்கோவா மாம்பழங்களுக்கிடையே ஒரேயொரு அழுகிய மாம்பழம் மட்டும் இருந்தால் அது எப்படி ஒட்டுமொத்த மாம்பழங்களையும் அழுகச் செய்து சீரழிக்கும் என அவர் வாதிட்டபோது... ஒட்டுமொத்த அரங்கமே பயங்கரமாகக் கைத்தட்டி, ஆர்ப்பரித்து பேராசிரியர் ஔவை நடராசன் அணிக்கு வெற்றிவாகைத் தேடித் தந்தது என்பதை என்னுடைய இந்த 84ஆம் வயதிலும் நான் சிந்தித்துப் பார்க்கிறேன்.

தந்தை ஔவை துரைசாமி அவர்கள்:

நற்றிணை, சிலப்பதிகாரம், திருவருட்பா உள்ளிட்ட பலபனுவல்களுக்குஉரைஎழுதியதால் 'உரை வேந்தர்' என்றழைக்கப்பட்டார். புகழ் பெற்ற டாக்டர் மெய்கண்டான் இவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது நாடறியும்!

பேராசிரியர் ஔவை நடராசனின் ஆய்வுகள்:

மதுரை தியாகராயர் கல்லூரியில் ஔவை நடராசன் முதுகலைப் பட்டம் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சங்க இலக்கியங்களில் பெயரிடும் மரபு என்ற தலைப்பில் ஆய்வு செய்து 1958ஆம் ஆண்டில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார்.

அதன்பின், சங்க காலப் புலமைச் செவிலியர் எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார்.

பேராசிரியர் ஔவை நடராசன் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறப்பாகப் பேசும் திறன் பெற்றவர். அவர் மதுரை தியாகராயர் கல்லூரி, தஞ்சை மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரிகளில் தமிழ் விரிவுரையாளராய்ப் பணியாற்றினார்.

அம்மட்டோ? புது தில்லி அனைத்திந்திய வானொலி நிலைய செய்தி வாசிப்பாளர் மற்றும் அறிவிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் சென்னை காந்தி இராமலிங்கர் பணி மன்றச் செயலாளராகப் பணிப்புரிந்துள்ளார்.

இவை மட்டுமன்று, திரு. ஔவை நடராசன் அவர்கள் தமிழ் நாட்டரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநராகவு *1975*ஆம் ஆண்டு முதல் *1984*ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலாளர்:

*1984*ஆம் ஆண்டு முதல் *1992*ஆம் ஆண்டு வரைப் பணியாற்றினார். இவை அனைத்திற்கும் மேலாக தமிழ்நாட்டு அரசுத் துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் இவர் ஒருவர் மட்டுமே.

16.12.1992 முதல் *15.12.1995* வரை தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் பணியாற்றினார்.

*2014*ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத் துணைத் தலைவராய் பணிப்புரிந்தார்.

*2015*ஆம் ஆண்டில் ஔவை நடராசன் சென்னை பாரத் பல்கலைக்கழக வேந்தராய் பணியாற்றத் தொடங்கினார்.

ஔவை நடராசன் எழுதிய நூல்கள்:

ஔவை நடராசன் 'வாழ்விக்க வந்த வள்ளலார்', '*Art Panorama of Tamils*', 'கம்பர் விருந்து', 'கம்பர் மாட்சி', 'பேரறிஞர் அண்ணா', 'திருப்பாவை விளக்கம்', 'திருவெம்பாவை விளக்கம்', 'சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள்', 'அருளுக்கு அன்னை சொன்னது', '*Self Confidence*', '*Saying of Stalwart*', '*Thirukkovaiyar*' எனப் பல நூல்களை எழுதியுள்ளார்.

ஔவை நடராசன் பங்கேற்ற விழாக்கள்:

சான்பிரான்சிஸ்கோ அனைத்து நாடுகளின் கவிஞர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் சார்பில் ஔவை நடராசன் பங்கேற்றார்.

மதுரையில் *1981*ஆம் ஆண்டு *5*ஆவது உலகத் தமிழ் மாநாடு நடந்தபோது, அதன் பொதுச்

செயலாளராக பேராசிரியர் ஔவை நடராசன் பொறுப்பேற்றார்.

*1989*ஆம் ஆண்டு *7*ஆம் உலகத் தமிழ் மாநாடு மொரீசியஸில் நடந்தபோது அதன் உறுப்பினராகத் திகழ்ந்தவர் ஔவை நடராசன்.

விருதுகள்:

*2009*ஆம் ஆண்டில் தமிழக அரசு ஔவை நடராசன் அவர்களுக்கு 'கலைமாமணி விருது' வழங்கியது!

*2010*ஆம் ஆண்டில் 'பேரறிஞர் அண்ணா விருது' வழங்கப்பட்டது!

*2011*ஆம் ஆண்டு தில்லி மத்திய அரசு 'பத்ம ஸ்ரீ' விருது வழங்கி பெருமைப்படுத்தியது!

*2012*ஆம் ஆண்டு கொழும்பு கம்பன் கழகம் 'தன்னேரில்லாத தமிழ் மகன்' விருது வழங்கியது!

*2014*ஆம் ஆண்டு சி.பா.ஆதித்தனாரின் 'மூத்த தமிழறிஞர்' விருது வழங்கப்பட்டது!

இவ்வாறு, ஒட்டுமொத்த நாடே ஏற்றிப் போற்றும் பேராசிரியர் ஔவை நடராசன் அவர்களை சென்னை அடையாறில் உள்ள எங்கள் செயிண்ட் லூயிஸ் நிறுவனத்தின் மாணவர் இலக்கிய மன்றம் அன்புடன் வரவேற்று பெருமைப்படுத்தியது!

தமிழ்ப் பேரறிஞர் மறைந்தார்:

பேராசிரியர் ஔவை நடராசன் அவர்கள் 2022ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாள் இயற்கை எய்திய போது... ஒட்டுமொத்த தமிழர் இனமே கதறி கண்ணீர் விட்டது!

உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் 'பாதி அண்ணா' எனப் போற்றப்பட்ட பேராசிரியர் ஔவை நடராசனின் பூதவுடல் தமிழ்நாட்டுக் காவல் துறையின் அரச மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க நல்லடக்கம் செய்யப்பட்டது. ●

கேள்வி பதில்



பதில்கள்: மு.மேத்தா

1. திரைப்படத்தில் நடிக்க அழைத்தால் போவீர்களா?

வசந்தா, ஜோதிராஜ் திருச்சி

போனேன் ஒருமுறை!

'அழகிய தமிழ்மகன்' என்ற படம்.

கல்லூரி மாணவர்களின் கவிதைப் போட்டியில் தளபதி 'விஜய்'க்கு நான் விருது வழங்கிப் பேசுவது போல் காட்சி! "சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிவேந்தர் மு.மேத்தா அவர்களே! வருக!" என்று மிகப்பெரிய அலங்கார வளைவு வைத்திருந்த மண்டபத்தினுள் அழைத்துச் சென்று- என்னை- நானாகவே நடிக்க வைத்தார்கள். அந்த மலையாளத் திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநரும்.

ஒரு கவிஞன் பாடலாசிரியனாகி நடிகனாகவும் ஆன கதை இது!

2. சதாம் ஹூசேனைச் சந்தித்தால் என்ன கேட்பீர்கள்?

கே.ஆர்.தேவேந்திரன், கொணவட்டம்

ஒதுங்கிக் கொள்கிறீர்களா கொஞ்சம்? உலக நாடுகளை நாங்கள் ஒதுங்கச் சொல்கிறோம்.

3. உங்களுக்குப் பிடித்த தமிழ் நடிகை யார்?

மஞ்சுளா தேவி, கும்பகோணம்

பானுப்ரியா!

அந்தக் கண்களுக்குள்ளே இன்னும் நான் எழுதாத சில கவிதைகள் இருக்கின்றன.

4. இலக்கிய உலகில் ஜெயகாந்தனுக்கு அடுத்தபடியாக தலைக்கனம் பிடித்த மனிதராமே நீங்கள்?

ரா.ஜோதிராமன், நெல்லிக்குப்பம்

ஆமாம்! அடிக்கடி நான் 'முடி' சூடிக்கொள்வதுண்டு. (மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் முடி வெட்டிகொள்வேன்.)

5. யாரைச் சந்தித்துப் பேச ஆசைப்படுகிறீர்கள்?

வெ. செந்தில்குமார், கொங்கணாபுரம்

லட்சுமியை! சரஸ்வதி தினமும் என்னோடு பேசிக் கொண்டுதான் இருக்கிறாள். லட்சுமிதான் பேச மறுக்கிறாள்.

6. காதலிக்க என்ன வேண்டும்?

லட்சுமி செங்குட்டுவன், வேலூர்.

இரண்டு பிச்சைப் பாத்திரங்கள் கண்கள்!

7. மேத்தா புதுக் கவிதையின் தாத்தாவா?

ஆர். மோகன்குமார், நீடாமங்கலம்

எது-கை கொடுக்கிறது? எதுகை!

குழந்தை மனம் கொண்டவர்கள் கூறுகிறார்கள். கோபித்துக் கொள்ளாதீர்கள்.

8. திரையுலகைப் பற்றித் தாங்கள் புரிந்து கொண்டது என்ன?

ஆ. பாலாஜிகுமார், நீடாமங்கலம்

கடல்! முத்துக் குளிப்பவர் சிலர். மூழ்கிப் போனவர் பலர். ஓர் ஓரமாக என் ஓடம்! ●

நன்றி: மு. மேத்தா பதில்கள், கவிதா பப்ளிகேஷன்

சாரலும்... தூறலும் 26

— எஸ் ஸ்கொயர்

நெஞ்சம் இனிக்கப் பாடும் நஞ்சம்மா!

நஞ்சம்மா பழங்குடி இனத்தைச் சார்ந்தவர். கடவுள் தேசம் கேரளாவில் அட்டப்பாடி மலைக்கிராமம்தான் சொந்த ஊர். நஞ்சம்மா கிராமியப் பாடல்கள் பாடுவதில் சிறந்தவர். அவருக்கு 2020ஆம் ஆண்டு திரையிடப்பட்ட 'அய்யப்பனும் கோஷியும்' என்ற படத்தில் பாடல் பாட வாய்ப்பளித்தனர்!

அப்படத்தில், அவர் "கலக்காத சந்தன மரம் வெகுவாக பூ தரிக்கும்" என்ற பாடலைப் பாடினார். இப்பாடல் பிரபலமாகி பட்டித்தொட்டியெலாம் ஒலிக்கத் தொடங்கியது! இந்திய அரசு இப்பாடலைப் பாராட்டி நஞ்சம்மாவிற்கு சிறந்த பின்னணி பாடகிக்கான தேசிய விருதை வழங்கியது!

தற்போது, இவர் தமிழிலும் பாடகியாக அறிமுகமாக உள்ளார்! ஆதாம் என்ற மலையாளப் பட இயக்குநர் 'சமர்'... 'சீன் நெம்பர் 62' என்ற – தமிழ்ப்படத்தை இயக்குகிறார். அதில், நஞ்சம்மா "என் சேவல்... " என்ற பாடலை பாடகர் வேல் முருகனுடன் சேர்ந்து பாடியுள்ளார். இப்பாடல் சமூக வலைத்தளங்களில் வெளியாகி ரசிகர்களின் மனத்தைக் கவர்ந்து வருகிறது! ●

Aid not to Aids!
எய்ட்ஸ் விழிப்புணர்வு வில்லுப்பாட்டு

➲ சேலம் சங்கர் எம்.ஏ.,



குருஜி: [பாடல்]

பேயி...
கொடூரப் பேயி!
பேயி...
கொடூரப் பேயி!
HIV உண்டாக்கும் நோயி
எய்ட்ஸ் நோயி!
உயிரைக் குடிக்க வந்த பாவி!
மா பாவி!
எய்ட்ஸூ பாவி!
பொல்லாத...
காட்டேரி போல வந்த நோயி...
பறிக்கும் ஆவி!...
நம்ம ஆவி

குருஜி: மகா ஜனங்களே! மொதல் எய்ட்ஸ் நோயாளியை 1981ஆம் ஆண்டிலெதான் கண்டுபிடிச்சாங்க. அமெரிக்காவிலெ இருந்த டாக்டர்ஸூங்க எய்ட்ஸ்ங்கறது... பயங்கரமான உயிர்க்கொல்லி நோயின்னு உலகத்துக்கு அறிவிச்சாங்க.

பொகையிலைப்பட்டி: அப்ப, இந்த பதிமூணு வருஷமா... நாம் எய்ட்ஸ் பத்தி கண்டுக்காமெ... தேமேன்னு இருந்துட்டோம்னு சொல்லுங்க.

கருப்பட்டி: அட! ஆம்பிளைங்களை விடுய்யா. பகல் முழுக்க ஆயிரத்தெட்டு ஜோலியிலெ அலையறாங்க. ஊட்டோட குந்தியிருக்கிற பொம்பளைங்க இதைப்பத்தி பொறுப்பா தெரிஞ்சிட்டிருக்கலாமில்லே?....

குருஜி: [அவுட்டுச் சிரிப்பு சிரித்தல்] பொம்பளைங்கதான், சதா கண்ணாடி முன்னாடி உக்காந்துகிட்டு... இருபத்தி நாலு மணி நேரமும் பவுடர்... பவுடர்னு... பவுடர் பின்னாடியே மெதந்துண்டு இருக்காளே!

பொகையிலைப்பட்டி: குருஜி! நீங்க என்ன சொல்றேள்?

குருஜி: இன்னிக்கு இந்த லோகமே... பவுடர்லெ மெதந்துண்டிருக்குன்னு சொல்றேன்.

கருப்பட்டி: என்ன? லோகம் பூராவும் பவுடர் மயமா? குருஜி! கொஞ்சம் வெவரமா சொல்லுங்களேன்.

குருஜி: அடுக்களைப் புகுந்தால்...

பொகை & கருப்: திடீர் ரசப் பவுடர்!

குருஜி: சாம்பார் மணக்க...

பொகை & கருப்: மசாலாப் பவுடர்!

குருஜி: துணிகளை வெளுத்திட...

பொகை & கருப்: ஏரியல் பவுடர்!

குருஜி: பாத்திரம் துலக்கிட...



பொகை & கருப்: பாலிஷ் பவுடர்!

குருஜி: தேய்த்துடல் குளித்திட...

பொகை & கருப்: சீயக்காய்ப் பவுடர்!

குருஜி: பீரோ மணக்க...

பொகை & கருப்: ஃப்ளவர் டஸ்ட் பவுடர்!

குருஜி: ஸாரீஸ் மணக்க..

பொகை & கருப்: சாண்டல் வுட் பவுடர்!

குருஜி: காபிக்கும், தயிருக்கும்...

பொகை & கருப்: கடைப் பால்பவுடர்!

குருஜி: சேய்ப்பசி அடங்கிட...

பொகை & கருப்: அமுல் டின் பவுடர்!

குருஜி: ஜூஸை கலக்கிட...

பொகை & கருப்: ரஸனா பவுடர்!

குருஜி: மொகத்தோட சுருக்கத்தை மறைக்க...

பொகை & கருப்: கம கம கம கம கம கம பவுடர்!

குருஜி: இப்பிடி, பொம்பளைங்க சதா பவுடர் நெனைப்பிலியே இருக்கறப்போ...

அவுங்க எப்பிடி எய்ட்ஸ் பத்தி தெரிஞ்சிக்க முடியும்னே?

பொகையிலை: குருஜி! அந்த எய்ட்ஸ் நோயி... எப்படி பரவுதுன்னு தெரிஞ்சிக்கலாமா?

குருஜி: பேஷா தெரிஞ்சிக்கலாம். கொஞ்சம் கூட மனக்கட்டுப்பாடு இல்லாமெ கண்ட பேருங்களோடு உடலுறவு வெச்சிக்கிறவங்க மூலமா இந்த பயங்கரமான எய்ட்ஸ் நோய் பரவுது.

கருப்: அப்ப, வெர்னாகுலர் டிஸீஸங்கற... *V.D* பால்வினை நோயும், இந்த எய்ட்ஸ் நோயும் அண்ணன் தம்பின்னு சொல்லுங்க.

குருஜி: இல்லே... சக்களத்திங்க! பால்வினை நோய் வேறே! இந்த எய்ட்ஸ் நோய் வேறெ.

பொகை: பால்வினை நோயை குணமாக்க முடியும்... அதை குணப்படுத்த நெறைய மருந்துகள் இருக்கு; பல்வேறு சிகிச்சை முறைகளும் இருக்கு.

கருப்: அப்ப...எய்ட்ஸ் நோயை குணமாக்கவே முடியாதுன்னு சொல்லுங்க!

குருஜி: முடியாது! முடியாது! நிச்சயமா... முடியவே முடியாது.

– ஒலிக்கும்

உயர்கல்விக்கு உதவும் உன்னத அமைப்புகள்



அகரம் ஃபவுண்டேஷன் www.agaram.in/contact

ஆனந்தம் ஃபவுண்டேஷன் www.anandham.org

கோல்ட் ஆர்ட் ஃபவுண்டேஷன் www.goldheartfoundation.org

ஹோப்3 ஃபவுண்டேஷன் www.hope3.org/apply

மாற்றம் ஃபவுண்டேஷன் https://admissions.maatramfoundation.com/

சீட்ஸ் www.seeeds.org/scholarship

ஷூட்டிங் ஸ்டார்ஸ் ஃபவுண்டேஷன் www.bit.ly/ssfscholars

சிறு துளிகள் ஃபவுண்டேஷன் https://bit.ly/SiFoApplicationForm

டீம் எவரெஸ்ட் www.everestscholarship.com •

தேனீக்களின் வகைகள்

➲ சுந்தராம்பாள் மைந்தன்

தேனீக்களில் பல வகை உண்டு. (1) மலைத் தேனீ (ஏபிஸ் டார்சேரா) (2) சிறு தேனீ (ஏபிஸ்ப்லோரியா) (3) இந்திய தேனீ (ஏபிஸ் செரானா இண்டிகா) (4) ஐரோப்பா தேனீ (ஏபிஸ் மெல்லி பஃப்ரா) (5) கொடுக்கற்ற தேனீ (ட்ரை இனேனா இரிடிபெனிஸ்). இந்த ஐந்து வகை தேனீக்களுடன் கேரளாவில் கொடுக்கற்ற தேனீக்கள் வகைகளும் உள்ளன. அவைகளுக்கு கொடுக்குகள் சரியான முறையில் வளரா.

அவை மகரந்த சேர்க்கையில் அதிகத் திறன் கொண்டவை. அத்தேனீக்கள் ஒரு வருடத்திற்கு 300 முதல் 400 கிராம் தேனை சேகரிக்கும்.

கூடுகளை நிறுவும் முறை:

தேனீ வளர்க்கும் இடம் நல்ல வடிகால் வசதியுடன் இருக்க வேண்டும். அதுவும் பழத்தோட்டத்திற்கு அருகில் அமைப்பது நல்லது. குறிப்பாக, பழத்தோட்டத்திற்கு அருகிலும் நிறைய மதுரம், மகரந்தம், நீர் கிடைக்கக்கூடிய இடமாகவும் இருக்க வேண்டும். சூரிய ஒளியிலிருந்து பாதுகாப்பு மிகவும் தேவை. அதன்மூலம் மிதமான வெப்பம் கிடைக்கும்.

தேன் கூட்டின் கால்கள் நீருள்ள பாத்திரத்தில் நனையும்படி இருந்தால், தேன் கூட்டிற்குள் எறும்புகள் ஏறா. தேனீக்களின் காலனிகளை கிழக்கு திசை நோக்கி அமைத்தல் வேண்டும்.

தேனீ காலனிகளை அமைக்கும் முறை:

தேனீக்களின் காலனிகள் இயற்கையான கூட்டில் உள்ள தேனீக்களை எளிதில் மாற்றவோ அல்லது அவ்வழிச் செல்லும் தேனீக்களை கவரும்படி அமைய வேண்டும். முடிந்தால், ராணி ஈயைப் பிடித்து கூட்டிற்குள் வைத்தால் அது மற்ற தேனீக்களை கவர்ந்து இழுக்கும்.

சில வாரங்களுக்கு பாதி கப் சுடு நீரில், பாதி கப் சர்க்கரையைக் கலந்து வைத்தால் பெட்டியினுள் கூட்டினை வேகமாகக் கட்ட முடியும்; நெரிசலையும் தடுக்கலாம்.

காலனி நிர்வாகம்:

தேன் அதிகமாக கிடைக்கும் காலங்களில் வாரம் ஒரு முறை பெட்டிகளைக் கண்காணிக்க வேண்டும். பெட்டிகளை, கூரை, உற்பத்தி அறை, தளம் ஆகிய பகுதிகளில் சுத்தம் செய்ய வேண்டும். பெட்டியில் உள்ள புழு, பட்டு வகைகளை நீக்க வேண்டும்.

மைட்:

புதிய பொட்டாசியம் பெர்மாங்கனேட்டால் ஃபிரேமை சுத்தம் செய்ய வேண்டும்.

தேன் அறுவடை:

அக்டோபர் / நவம்பர் மற்றும் பிப்ரவரி / ஜூனில் தேன் அறுவடை செய்யலாம். ●



தமிழறிஞர் ஔவை நடராசன் மறைவிற்கு தமிழ்நாடு முதல்வர் நேரில் அஞ்சலி

சிறந்த தமிழறிஞர் ஔவை நடராசன் (87) அவர்கள் வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்திய செய்தி அறிந்து மிகவும் வேதனையுற்றேன். ஔவை நடராசன் அவர்கள் 'உரை வேந்தர்' ஔவை துரைசாமி அவர்களின் மகனாகப் பிறந்து, தந்தையைப் போலவே தமிழிலக்கியத்தில் நாட்டம் கொண்டு கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுவித்தவர் தமிழில் இவருக்கிருந்த ஆழங்காற்பட்ட புலமையால், தமிழ் வளர்ச்சித் துறையின் செயலர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர், சென்னை பாரத் பல்கலைக்கழக வேந்தர் உள்ளிட்ட பல பொறுப்புகள் இவரைத் தேடி வந்தன.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், கம்பராமாயணம் எனத் தமிழின் பெரும் இலக்கண இலக்கியங்களைப் பற்றி இவர் ஆற்றிய உரைகளால் கவரப்படாத தமிழார்வலர்கள் இருக்க முடியாது. தமது பேச்சாற்றலால் உவமைக் கவிஞர் சுரதா அவர்களாலேயே 'பாதி அண்ணா' எனப் பாராட்டப்பட்டவர். ஔவை நடராசன் கருணாநிதி மீது மிகுந்த பற்றும் மரியாதையும் கொண்டிருந்தவர். கருணாநிதி மறைந்தபோது நினைவேந்தல் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு புகழாரம் சூட்டியவர். தமது இறுதிக்காலம் வரையிலும் கருணாநிதியின் புகழைப் போற்றி வந்தவர்

தமது தமிழ்ப் பணிகளுக்காகப் பத்மஸ்ரீ, கலைமாமணி முதலிய ஏராளமான விருதுகளை ஔவை நடராசன் அவர்கள் பெற்றிருந்தார். எண்ணற்ற நூல்களையும், பல நூறு மாணாக்கர்களையும் நம்மிடம் விட்டுச் சென்றுள்ள பெருந்தகை ஔவை நடராசன் அவர்களின் மறைவு தமிழ்த்துறையினருக்கும், கல்விப்புலத்தாருக்கும் பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தார், தமிழறிஞர் பெருமக்கள் மற்றும் மாணவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். ●

அய்யகோ! இனி என்னோடு தனித்தமிழில் உரையாட எவருளார்?

➲ கவிப்பேரரசு **வைரமுத்து**



அய்யகோ!
அறிஞர் அவ்வை நடராசன்
மறைந்தாரே!
தமிழ்ச்சங்கத்தின்
ஏடொன்று எரிந்துபட்டதே
அகிலம் தழுவி வீசிய
தமிழ்த்தென்றல்
தன் வீச்சையும் மூச்சையும்
நிறுத்திவிட்டதே
பட்டிமன்றம்
பொட்டிழந்துவிட்டதே
இனி என்னோடு
தனித்தமிழில் உரையாட
எவருளார்?
பேசுதமிழ் உள்ளவரை
உங்கள் பெருமை
வாழும் பெருமை! •

அன்புப் பாலம்

உதவுவோருக்கும், உதவி தேவைப்படுவோருக்கும்
இடையே இணைப்புப் பாலம்

மலர்: 17 ✶ இதழ்: 8 ✶ மே 2023

http://anbupaalamebook.com/

நிறுவன ஆசிரியர்
வ.மா.குலேந்திரன்

ஆசிரியர்/பதிப்பாசிரியர்
பாலம் கலியாணசுந்தரம்

நிர்வாக ஆசிரியர்
ச. விஜய் ஆனந்த்

பாலம் ஐயாவின் தனிச் செயலாளர்
இரா.பரமசிவம்
Cell: 9444132349

ஆசிரியர் குழு
கலைச்செல்வி லியோமுத்து
சித்ரா மனோகரன்

சட்ட ஆலோசகர்
S.ஜெயராமன், B.A.,B.L

புகைப்படங்கள்
கலைமாமணி யோகா
சுபாஷ்

தனி இதழ் ரூ.30
ஆண்டுச் சந்தா ரூ.360
நிரந்தர சந்தா ரூ.3,000
புரவலர் ரூ.5,000
(நிரந்தர சந்தா உட்பட)
காப்பாளர் ரூ.10,000
(நிரந்தர சந்தா உட்பட)
பிறநாடுகள் 100 அமெரிக்க டாலர்
காசோலை அல்லது வரைவோலை
(DD) 'அன்புப் பாலம்' என்ற பெயரில் எடுக்கவும்

அன்புப் பாலம் A/C விவரம்
Paalam Kalyanasundaram
A/C No.1013435180, Central Bank Of India,
IFS Code : CBIN0281293,
Adyar Branch, Chennai.

முகவரி
பாலம் மாத இதழ்
புது எண்.16,46ஆம் தெரு, 9ஆவது அவென்யூ
அசோக் நகர், சென்னை - 83.
போன்: 044-24892524,
கைப்பேசி: 98402 18847

இதழ் வடிவமைப்பு
வண்ண வரைகலை
Vanna Varaikalai
கைப்பேசி: 99411 83538



ஔவை து. நடராசன்

“ஔவை நடராசன் அவர்கள் அரசியலில் நுழைந்திருந்தால் அண்ணாவின் தம்பிகளுக்குப் போட்டியாக அமைந்திருப்பார். நடிப்பில் ஈடுபட்டிருந்தாலும் சிவாசி கணேசனுக்கு அடுத்த நிலையைப் பெற்றிருப்பார். இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதியிருந்தால் தமிழ்நாட்டின் தலைசிறந்த செயலாளராகத் திகழ்ந்திருப்பார். ஆனால் ஆசிரியப்பணிக்கு வந்துள்ளதால், நமக்கெல்லாம் தலைசிறந்த ஊக்க ஊற்றாக விளங்குகிறார்”

தமிழ்நாட்டுத் தமிழறிஞர், கல்வியாளர், சிந்தனையாளர் மற்றும் பேச்சாளர் ஆவார். ஆங்கிலத்திலும், தமிழிலும் நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். உலகின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற மாநாடுகளில் பங்கேற்றுள்ளார்.

பிறப்பு

தற்போதைய திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறு எனும் ஊரில் லோகாம்பாள் - ஔவை துரைசாமி இணையருக்கு மகனாக 24 ஏப்ரல் 1936 அன்று பிறந்தார் நடராசன். இவர் தந்தை நற்றிணை, சிலப்பதிகாரம், திருவருட்பா உள்ளிட்ட பல பனுவல்களுக்கு உரை எழுதியமையால் ’உரைவேந்தர்’ என அழைக்கப்பெற்றவர். புகழ்பெற்ற மருத்துவர் மெய்கண்டான் உள்ளிட்ட 10 பேர் நடராசனின் உடன்பிறப்புகள் ஆவர்.

கல்வி

மதுரை தியாகரார்சர் கல்லூரியில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டம் (Master of Arts) பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் “சங்க இலக்கியத்தில் பெயரிடு மரபு” என்னும் பொருளில் ஆய்வு செய்து 1958ஆம் ஆண்டில் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றார். அதன் பின்னர் “சங்க காலப் புலமைச் செவ்வியர்” என்னும் பொருளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கிலம் எனும் இரு மொழிகளிலும் சிறப்பாகப் பேசும் திறன் கொண்டவர்.

பணிகள்

மதுரை தியாகராசர் கல்லூரி, தஞ்சாவூரிலுள்ள மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அதன் பிறகு, புதுதில்லியிலுள்ள அனைத்திந்திய வானொலி நிலையத்தில் செய்தி வாசிப்பாளர், அறிவிப்பாளர் எனப் பணியாற்றினார். அதன் பின்னர் சென்னையிலுள்ள காந்தி ராமலிங்கர் பணி மன்றத்தின் செயலாளராகப் பணியாற்றினார்.

தமிழ்நாட்டு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநராக 1975 முதல் 1984 வரை பணியாற்றினார் பின்னர் 1984 முதல் 1992 வரை தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளராகப் பணியாற்றினார். இந்திய ஆட்சிப் பணி அலுவலராக இல்லாமல் தமிழ்நாட்டு அரசுத் துறையின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் இவர் ஒருவரே..

16 திசம்பர் 1992 முதல் 15 திசம்பர் 1995 வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பினை வகித்தார். அதன் பிறகு, 2014 ஆம் ஆண்டில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் துணைத்தலைவராக இருந்தார். 2015 முதல் சென்னையிலுள்ள் பாரத் பல்கலைக்கழக வேந்தராகப் பணியாற்றினார்.

படைப்புகள்

ஆண்டு	தலைப்பு	பதிப்பகம்
1966	வாழ்விக்க வந்த வள்ளலார்	சேகர் பதிப்பகம்
1992	Art Panaroma of Tamils (இணை ஆசிரியர் - நடன காசிநாதன்)	தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு
2005	கம்பர் விருந்து	
	கம்பர் மாட்சி	
	பேரறிஞர் அண்ணா	
	திருப்பாவை விளக்கம்	
	திருவெம்பாவை விளக்கம்	
	சங்க இலக்கிய பெண்பாற் புலவர்கள்	
	அருளுக்கு அவ்வை சொன்னது	
	Self Confidence	
	Saying of Stalwart	
	Thirukkovaiyar	

பங்கேற்ற நிகழ்ச்சிகள்

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் (1981) பொதுச்செயலாளராகச் செயலாற்றினார்.

மொரீசியஷிஸ்ல் நடைபெற்ற ஏழாம் உலகத் தமிழ் மாநாட்டின் (1989) குழுவில் உறுப்பினராக இருந்தார்.

தென்கிழக்கு ஆசிய மாநாட்டில் மருத்துவத் தொழில்நுட்ப சொல்லாக்கர் குழுத் துணைத்தலைவராகப் பங்கேற்று சிறப்பித்திருக்கிறார்.

29 நவம்பர் 2006 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் பல்கலைக்கழக இரண்டாவது பட்டமளிப்பு விழாவில், விழாப் பேருரையாற்றினார்.

விருதுகள்

ஆண்டு	விருது	முகமை
2009	கலைமாமணி விருது	தமிழ்நாட்டு அரசு (தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்)
2010	பேரறிஞர் அண்ணா விருது	தமிழ்நாட்டு அரசு (தமிழ் வளர்ச்சித் துறை)
2011	பத்மஸ்ரீ விருது[11]	இந்திய அரசு
2012	கம்பன் புகழ் விருது	கொழும்பு கம்பன் கழகம் (இலங்கை)
2012	தன்னேரில்லாத தமிழ் மகன் விருது	கம்பர் கழகம் (இலங்கை)
2014	சி.பா. ஆதித்தனார் மூத்த தமிழறிஞர் விருது	தினத்தந்தி நாளிதழ்

மறைவு

ஔவை நடராசன் தமது 87ஆம் அகவையில் 21 நவம்பர் 2022 அன்று சென்னையில் காலமானார். தமிழ்நாட்டுக் காவல்துறை மரியாதையுடன் இறுதிச்சடங்கு நடைபெற்றபின் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

புகழ்

நடராசன், பச்சையப்பன் கல்லூரி மாணவராக விளங்கியபோதிலேயே இவரது சொல்லாற்றல் கண்டுவியந்த கவிஞர் சுரதா, இவரைப் "பாதி அண்ணா" என்று பாராட்டினார்.

"ஔவை நடராசன் அவர்கள் அரசியலில் நுழைந்திருந்தால் அண்ணாவின் தம்பிகளுக்குப் போட்டியாக அமைந்திருப்பார். நடிப்பில் ஈடுபட்டிருந்தாலும் சிவாசி கணேசனுக்கு அடுத்த நிலையைப் பெற்றிருப்பார். இந்திய ஆட்சிப் பணித் தேர்வு எழுதியிருந்தால் தமிழ்நாட்டின் தலைசிறந்த செயலாளராகத் திகழ்ந்திருப்பார். ஆனால் ஆசிரியப்பணிக்கு வந்துள்ளதால், நமக்கெல்லாம் தலைசிறந்த ஊக்க ஊற்றாக விளங்குகிறார்" என்று தன் மாணவப்பருவத்தில் தன் உடன் மாணவர்களிடம் கூறினார் மறைமலை இலக்குவனார். ●

ஔவை நடராசன்

அவர்களுக்கு இரங்கற்பா

முனைவர் அ. சிவபெருமான்

தோன்றல் சிறப்பு

பெருமழைப்பு லவர்ஔவை துரைசாமி தந்தைஆவார்
பெரும்புயல்பு லவர்ஔவை நடராசன் மகனாவார்
நூல்களுக்கு உரைஎழுதும் உரைவேந்தர் என்றுசொல்வர் தந்தையினை
நூல்களையே உரைக்கின்ற உரைவேந்தர் என்றுசொல்வர் மகனையும்
துரைசாமி லோகாம்பாள் பெற்றெடுத்த தவக்குழந்தை
எண்பத்தா றகவைவரை வாழ்ந்திட்ட தமிழ்க்குழந்தை
சிவபாத சேகரனாம் இயற்பெயரைக் கொண்டவராம்
நடராசன் என்றேதான் பெயர்மாற்றம் கொண்டாரே
பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்எம்,ஏ, படிப்பினையும்
இச்சையாகப் படித்திட்டார் இனிதாக முடித்திட்டார்
சங்ககாலப் பெண்பாற்பு லவரென்றே தலைப்பினிலே
தங்கமகன் முனைவரென்னும் பட்டத்தை முடித்திட்டார்

பணிச்சிறப்பு

மன்னர்சர போஜிபெயர் பெற்றிட்ட கல்லூரியில்
மன்னர்நட ராசனுமே மதிப்புடனே பணிசெய்தார்
தில்லியிலே அகிலஇந்திய வானொலியாம் நிறுவனத்தில்
நல்லபடி செய்தியினை வாசிக்கும் பணிபுரிந்தார்
தலைமைச்செயலகத்தினிலே மொழிபெயர்ப்புத் துறையினிலே
தலைமைமிகு இயக்குநராய்த் தகைமையுடன் பணிசெய்தார்
நஞ்சையுமே புஞ்சையுமே கொஞ்சியுமே விளையாடும்
தஞ்சைத்தமிழ்ப் பல்கலையின் துணைவேந்த ராய்இருந்தார்
சென்னையிலே பாரத்தின் பெயர்தாங்கும் பல்கலையில்
நிரந்தரவேந் தர்பணியில் நிரந்தரமாய் ஆட்சிசெய்தார்
செல்வாக்கு மிகுந்திட்ட சிறப்பான பதவிகளில்
சொல்வாக்கு மிக்கவராய்ச் சுறுசுறுப்பாய்ப் பணிசெய்தார்
வெற்றிக்கொடி பலவும்தான் நாட்டிட்டார் பணியினிலே
கடமையினைக் கண்ணாக நேர்மையினை உயிராகக்
கண்டிப்பை மூச்சாகக் கொண்டவராம் இப்பெரியார்

விருதுச்சிறப்பு

தமிழகத்தின் அரசுதந்த கலைமாமணி விருதினையுமே
மத்தியநல் அரசுதந்த பத்மத்திரு விருதினையும்
அண்ணாவின் பெயராலே தந்திட்ட விருதினையுமே
திருக்குறள்நெறிச் செம்மலென்ற தங்கமான விருதினையும்
ஆழ்வார்மை யம்தந்த இராமாநுசர் விருதினையும்
என்றுபல விருதுகளை ஏற்றமுடன் பெற்றிட்டார்

சொல்வேந்தர் சிறப்பு

சொற்கள்தம் காதலரை சொல்வேந்தர் எனஅழைப்பர்
அற்பமான கோபத்தை அணுவளவும் மேற்கொள்ளார்
நாவென்னும் நல்மந்திரக் கோலினையும் இவரசைத்தால்
நானிலமும் மயங்கிடுமே நற்சிலையாய் அமர்ந்திடுமே
இனிமையோடு அழகும்தான் பேச்சினிலே அமர்ந்திருக்கும்
கனித்தமிழ்மேல் கொள்பக்தி மூச்சினிலே நிறைந்திருக்கும்
பொன்னாரின் பேச்சுக்கு எதுநிற்கும் முன்னாடி
அண்ணாவே இவருடைய பேச்சுக்கு முன்னோடி
ஐந்தாவது ஏழாவது உலகத்தமிழ் மாநாட்டை
வேந்தருமே சிறப்பாக நடத்தித்தான் காட்டிட்டார்

குடும்பச் சிறப்பு

குழந்தைநல மருத்துவராம் தாராவைக் கரம்பிடித்தார்
குழந்தைகளோ முத்தமிழ்போல் மூன்றினையுமே ஈன்றெடுத்தார்
தன்வழியில் ஒருமகனை வழிநடத்திச் சென்றிட்டார்
தாய்வழியில் இருமகனை மருத்துவராய் ஆக்கிட்டார்
நல்லதொரு குடும்பமென பேர்பெற்ற குடும்பமிது
எல்லோர்க்கும் வழிகாட்டும் ஊர்போற்றும் குடும்பமிது
மனமகிழ்ச்சி கொண்டிட்ட நிறைவான குடும்பமிது
பெருமைபல பெற்றிட்ட அருமையான குடும்பமிது
கல்விக்கு அதிபதியாம் கலைமகளின் அருட்பார்வை
பூரணமாய்ப் பெற்றிட்ட பேர்பெற்ற குடும்பமிது

மேடைச் சிறப்பு

துண்டுச்சீட் டொன்றுகூட தன்கையில் இல்லாமல்
மேடையிலே கோடையிடி யாகத்தான் முழங்கிடுவார்
உணர்வுக்கு விருந்திளிப்பார் உவகையான பேச்சாலே
குன்றக்குடி அடிகளார்போல் தமிழ்க்குன்று கோமகனும்
பட்டிமன்றக் கலையினையும் பட்டிதொட்டி கொண்டுசென்றார்

கம்பன்பெயர் கழகம்தான் விழாஎதுவும் எடுத்தாலும்
அன்பன்இவர் இல்லாமல் ஒருபோதும் நடக்காது
அருட்பாவின் மீதேதான்அளவற்ற ஈடுபாடு
இறைப்பாவைப் பாடுகின்ற ஏற்றமிகு கோவிலிலே
இலக்கியத்தை ஒலித்திடவே வைத்திட்ட பெருமகனார்

அரசியல் சிறப்பு

கன்னித்தமிழ்க் காவலராம் கற்கண்டுப் பாவலராம்
அந்நியமொழி ஆங்கிலத்தில் அளவற்ற புலமையுண்டு
கொள்கையினால் வேறுபட்ட மூன்றான முதல்வர்கள்
நல்லவரைக் கொண்டாடப் படுவதிலே ஒன்றுபட்டார்
இந்நாள்பா ராளுமன்ற உறுப்பினராம் ஜெகத்ரட்சகன்
மன்னவர்க்கு வளர்ப்புமகன் இவர்மறைந்த பின்னாளே
இரங்கற்பா பாடித்தான் அனைவரையும் அழவைத்தார்
இடுகாடு வரைஅவரின் உடல்சுமந்து சென்றிட்டார்

மதுரைகாமராசர் பல்கலையில் என்கண் முன்நிகழ்ந்த (13.2.2009) அடக்கச் சிறப்பு

மதுரையிலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே நடந்ததிது
என்தந்தை அடிகளாரும் அவ்வையினைக் கண்டிட்டு
என்னுடைய நண்பர்நீர் என்றேதான் அழைத்திட்டார்
அவசரமாய் அதைமறுத்த ஔவைப்பெரு மகனாரும்
நண்பரல்ல சீடரென்று ஆணித்தர மாய்ச்சொன்னார்
இன்னுமந்த சொல்தானும் என்செவியில் ஒலிக்கிறதே
எவ்வளவோ பேர்பெற்ற ஏற்றமிகு மனிதரிடம்
இவ்வளவாம் அடக்கமா!என் றதிசயித்துப் போனேனே

தமிழாலே இறைஞ்சுகின்றேன்

பத்தான உலகத்தமிழ் மாநாட்டில் பங்குகொண்டார்
பதினொன்றாம் மாநாடு உமைத்தேடி அழைக்கின்றதே
பதிலென்ன யாம்சொல்வோம் தெரியாமல் விழிக்கின்றோம்
அற்றைத்திங் கள்அவ்வெண் நிலவென்ற பாடலையும்
இற்றைக்கு இவ்விடத்தில் பதிலாக யாம்சொல்வோம்
அன்னாரின் ஆத்மாவும் நன்முறையில் அமைதியுற
பொன்னான தமிழாலே பரம்பொருளை இறைஞ்சுகிறேன் •

குடும்பத்திலிருந்து தொடங்கட்டும் பாலின சமத்துவம்

➲ தேனி முத்து பிரசாத்

பாலின சமத்துவம் பற்றி பல இடங்களில் நாம் பேசியிருப்போம். கல்லூரிகள், பள்ளிகள், அலுவலகங்கள், விழா மேடைகள் என்று பல இடங்களில் இது குறித்து பல விவாதங்கள், உரையாடல்கள் நடைபெற்றிருக்கும். உண்மையில் பாலின சமத்துவத்தின் ஆரம்பப்புள்ளியாக இருக்க வேண்டிய இடம் சமூகத்தின் அடிப்படை அழகான குடும்பம் தான். தன்னுடைய தாய்க்கு தரும் மரியாதையை தனது மனைவிக்கு தர மறுப்பதிலிருந்து இதை பார்க்கலாம். குடும்ப அமைப்பில் உள்ள இந்த போக்கு தான் அவர்களுடைய குழந்தைகளிடம் ஆரம்பித்து, அது கல்லூரி கடந்து அவர்கள் தகப்பன் ஆகும் வரை தொடர்கிறது.

கணவனாக மனைவியிடத்திலும், தகப்பனாக தன் பெண் குழந்தைகளிடத்திலும் எல்லாம் உங்களுக்காகதான் என்று கூறிவிட்டு, அவர்களுடைய சுதந்திரத்தை மட்டுப்படுத்தி, தன்னுடைய ஆசைகளை மட்டுமே வெளிப்படுத்திவிட்டு, அவர்களை வெறும் சொல்வதை கேட்கும் மனிதர்களாகவே வைத்துவிடுகிறார்கள். அதிலும், அவர்களுடைய சமையல் திறமையையும், வீட்டு வேலைகளையும் பெருமையாகப் பேசிவிட்டு, அதை அவர்களுக்கு குடும்பப் பெண்களின் மிகப்பெரும் அங்கீகரமாக்கிவிடுகிறார்கள். உன்னிப்பாக இதை கவனித்தோமேயானால், பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தின் முதல் தடையாக இதை பார்க்கலாம். அப்போது கல்வி தடையில்லையா? என்று கேள்வி வரும். இதை நன்கு பார்த்தோமானால், முதுநிலை பட்டதாரி பெண்களும் கூட இன்னும் இந்த நிலையில் இருப்பதை பார்க்கலாம். இதற்கு குடும்பத்தின் அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் வேண்டுவது அவசியம்.

ஆணும் பெண்ணும் சமம் என்ற நினைப்பு இரு பாலரிடத்திலும் வேண்டும். தாய் தன்னுடைய மகளை விட மகனை கவனிப்பதிலிருந்து, தந்தை மட்டுமல்ல தாயும் தெரிந்தோ தெரியாமலோ அந்த பாலின வேறுபாட்டிற்கு பாதை அமைத்துவிடுகிறார். ஒரு வீட்டில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருந்தால், இருவரையும் சமமாக வளர்க்கும் தன்மை வேண்டும். ஆண் குழந்தைகளுக்கு செய்யும் செலவை முதலீடாகவும், பெண் குழந்தைகளுக்கு செய்யும் செலவை வெட்டிச் செலவாகவும் பார்க்கும் எண்ணம் இன்றும் பெற்றோர்களிடத்தில் உள்ளது. இதை பார்த்து வளரும் குழந்தைகளிடத்தில், குறிப்பாக அந்த ஆண் குழந்தையிடம் தன் சகோதரியை விட தான் உயர்ந்தவன் என்கிற மனோபாவம் தான் மேலோங்குகிறது. அந்த எண்ணம் தான் ஆண் பென் சமத்துவத்தை கேள்விகுறியாக்கிவிடுகிறது.

கல்லூரியில் படிக்கும் தோழிகளிடம் சமத்துவத்தைப் பேசிவிட்டு தன்னுடைய சொந்த சகோதரியிடம் மட்டும் அதை பறிப்பது எந்த விதத்தில் நியாமாயிருக்கும்?எனவே, ஆண் பெண். பாலின சமத்துவம் என்பது, குடும்பத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை களைவதன் மூலமே சாத்தியமாகும்.மேலும் இந்த பாலின சமத்துவம் தான் பெண்களின் பொருளாதார சுதந்திரத்திற்கும் வழிகோலும் முக்கிய அம்சமாகும். •

The Sundaram Promise







For over six decades, Sundaram Finance has been the Benchmark for Excellence in Customer Service, built on the strong foundations of Trust and Prudence.

Over the years, we have striven hard to safeguard the wealth of tens of thousands of investors, who have placed their faith in Sundaram Finance. We have delivered consistent and attractive returns on their hard earned money.

But above all, we have ensured Peace of Mind for three generations of depositors, who have given us their unflinching Trust.

Today, as ever, we reiterate our commitment to the timeless Sundaram Values.

We make you THE SUNDARAM PROMISE.

SUNDARAM FINANCE GROUP®
Enduring values. New age thinking.

Sundaram Finance
www.sundaramfinance.in

Sundaram Home
www.sundaramhome.in

Sundaram Mutual
www.sundarammutual.in

Royal Sundaram
www.royalsundaram.in

இன் சுவையுடன்
அறுசுவை ஆனந்தம்

• இனிப்பு வகைகள் • கார வகைகள்
• தென் இந்திய வட இந்திய மற்றும் சைனீஸ் உணவு வகைகள்
• சாட் வகைகள் • மீல்க் ஷேக் • ஐஸ் கிரீஸ் • ஜுஸ் வகைகள்

இந்திய இனிப்புகளின் தனிச்சுவை

Adyar Ananda Bhavan
SWEETS & SNACKS

உயர்தர இந்திய சைவ உணவகம்

A2B
INDIAN VEG. RESTAURANT

H.O. Muthulakshmi Bhavan, No.9, M.G.Road,
Sastri Nagar, Adyar Chennai – 600 020 India
Tel: 91-44-4201 9988 2345 3050 Fax: 91-44-24460607
Email: info@aabsweets.com Web : www.aabsweets.com

சென்னை | காஞ்சிபுரம் | கோயமுத்தூர் | மதுரை | ஈரோடு | திருச்சி | சேலம் | கரூர் | ஓசூர் | திருப்பூர் | கடலூர் | தர்மபுரி | பெங்களூர் | பாண்டிச்சேரி | புது டில்லி

SRESHTA
சென்னை (ட்ரெடிஷனல்

நிச்சயதார்த்தம்
மற்றும் நலங்கிற்கு
முகூர்த்தத்திற்கு
சர்வ லட்சணம் நிறைந்த
ரிசப்ஷனுக்கு
ஜொலிக்க வைக்கும்
பரம்பரா பட்டு
சாமுத்ரிகா பட்டு
வஸ்த்ர கலா பட்டு
“சர்வ லட்சண சாமுத்ரிகா
முகூர்த்தப் பட்டுல
என்னோட அழகு அக்கா...”
“அக்கா, சாமுத்ரிகா பட்டுல மணமேடைக்கு வந்தப்ப அவளோட
அழகைப் பார்த்து எல்லாரும் அசந்துட்டாங்க.
மாப்ள... வெச்ச கண்ணு வாங்கல...
அக்காவே பேரழகு... அதுலயும் சாமுத்ரிகா பட்டுல
கேக்கணுமா என்ன...
திருமணத்தின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஏற்ற பிராண்டட் பட்டுகள்
போத்திஸில் மட்டுமே
பொட்டிக்) • ஸ்ரீவில்லிபுத்தூர் • திருநெல்வேலி •
ரை • கோயமுத்தூர் • திருவனந்தபுரம் • புதுச்சேரி
Online Shopping at www.pothys.com
போத்தீஸ்®
அழகிய ஜவுளிகளின் ஆலயம்

SRICHAKRA
BUILDERS & DEVELOPERS PVT. LTD.

WE BUILD LUXURY HOMES

CONTACT

Tel : 2366 17777 / 4552 8332
Cell : 94454 88823 / 94454 88832
E-mail : srichakra.ksr@gmail.com
Website : www.srichakrabuilders.com

OFFICE

65C, (New #38C), R.K. Shanmugam Salai,
K.K. Nagar, Chennai - 600078.





அன்புப் பாலம்

சந்தா விவரம்

பாலம் இதழின் விற்பனை வருமானம் முழுவதும் கல்விப்பணிக்கே!

ஆண்டு சந்தா	: ரூ.360/-
நிரந்தர சந்தா	: ரூ.3,000/-
புரவலர் சந்தா (நிரந்தர சந்தா உட்பட)	: ரூ.5,000/-
காப்பாளர் சந்தா (நிரந்தர சந்தா உட்பட)	: ரூ.15,000/-

என்றும் இன்பமுடன் இனிது வாழ
எதன் மீதும் பேராசை கொள்ளாதிருப்போம்.
பத்தில் ஒன்றை தானம் செய்வோம்
தினமும் ஓர் உயிருக்கு நன்மை செய்வோம்.

Bank Details:

Name : Kalyanasundharam.P | Bank : Bank of Baroda

Branch: Ashok Nagar | A/C No. : 75230100003506 | IFSC Code : BARB0VJASHO

அலுவலகம்: 38A, (பழைய எண் 65A) R.K.சண்முகம் சாலை, K.K.நகர், சென்னை - 600078.

anbupaalameditorial@gmail.com www.anbupaalam.org

Mobile: 98402 18847

பாலம் சிறு துளி மக்கள் இயக்கம்





பாலம் கலியாணசுந்தரம் ஐயா சேவை நிறுவனத்தை 1953 ஆம் ஆண்டு தனது 14 ஆவது வயதில் தொடங்கினார்கள். 70 ஆண்டு காலமாக தொடர்ந்து மக்கள் சேவையை செய்து வருகிறார்கள். இதற்கு நிதி ஆதாரமாக தான் 35 ஆண்டுகளாக வேலை பார்த்த ஊதியம் ரூ.30,00,000 குடும்பத்தில் தன் பங்கிற்கு கிடைத்த ரூ.50,00,000 மதிப்புடைய சொத்துக்கள், ஆயிரம் ஆண்டுகளில் சிறந்த மனிதர் என்ற அமெரிக்க விருதுக்கு பரிசாக கிடைத்த ரூ.30 கோடி ஆகியவற்றை முழுமையாக மக்கள் சேவைக்கே அளித்தார்கள்.

முத்து விழா நாயகராகிய பாலம் ஐயா பாலம் சிறு துளி மக்கள் இயக்கம் தொடங்கி மக்கள் அனைவரையும் சேவை செய்ய அழைக்கிறார். ஒவ்வொருவரும் தங்கள் வருவாயில் ஒரு சதவீதம், அதாவது ரூபாய்க்கு ஒருகாசு மட்டுமே பாலம் சேவைக்கு அளிக்க வேண்டுகிறார்.

ஒவ்வொருவரும் தங்கள் ஊதியம், ஓய்வு ஊதியம், தொழில் செய்து அதில் வரும் வருமானம் ஆகியவற்றிலிருந்து ஒரு சதவீதமும், பரிசு, போனஸ் நிலுவைத் தொகை ஆகிய எதிர்பாராத வருவாயின் போது 10 சதவீதமும் பாலத்திற்கு அளிக்க வேண்டுகிறோம். மாதந்தோறும் கொடுக்கலாம்.

பாலம் கலியாணசுந்தரம் ஐயாவின் வாழ்க்கை தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளில் திரைப்படமாக உருவாகிறது. பாலிவுட் நடிகர் அமிதாப்பச்சன், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இதில் நடிக்கிறார்கள். இருவரும் இப்படத்தில் நடிக்க ஊதியம் வேண்டாம் என்று சொல்லிவிட்டதால் படத்தயாரிப்பாளர் பாலம் ஐயாவிற்கு பெரும் தொகையை மதிப்பூதியமாக (Royalty) வழங்குகிறார். இது அமெரிக்காவின் பரிசை விட பல மடங்கு மேலானது. படத்திற்காக எவ்வளவு கிடைத்தாலும் தன் மக்கள் சேவைக்கே முழுமையாக அளிப்பேன் என பாலம் ஐயா அறிவித்துள்ளார். வாழ்வில் ஒரு செண்டு நிலம், ஓர் ஓலைக் குடிசை, ஒரு சல்லிக் காசு ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கொள்கை முடிவெடுத்து 75 ஆண்டுகளாக சேவை செய்து வருகிறார். அவருடைய தொண்டிற்கு மக்கள் அனைவரும் தம் வருவாயில் 1% அளித்து உதவ அன்போடு வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்!

பாசமுடன்,

பாலம் கலியாணசுந்தரம்

தொடர்புக்கு : பா. கலியாணசுந்தரம் : 98402 18847

முகவரி : 38A, (பழைய எண் 65A) R.K.சண்முகம் சாலை, K.K.நகர், சென்னை - 600078.

இ - மெயில் : anbupaalameditorial@gmail.com

வங்கி : Kalyanasundharam.P, A/C. No. 75230100003506. IFS Code: BARBOVJASHO Bank of Baroda, Ashok Nagar Branch, Chennai 83.

காசோலை : P.Kalyanasundaram (அல்லது) Anbu Paalam Kalyana Sundaram Trust என்ற பெயர்களில் வரவேற்கப்படுகிறது.

சிறுகதை

வீணா ஒரு விளக்கு!

அரன் எம்.ஏ.,

மாதவன் அரசுத் துறையில் ஹெல்த் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றி வந்தான். பால் விற்பவர்களுக்கு ஹெல்த் இன்ஸ்பெக்டர் மாதவனைக் கண்டாலே சிம்ம சொப்பனம் தான்!

“பால் ஏன் லொட லொடன்னு தண்ணி மாதிரியிருக்கு? பாலிலெ தண்ணி கலக்குறது தப்பில்லே; ஆனா தண்ணியிலெ பாலைக் கலக்குறது மகாப் பெரிய குத்தம்!” என்று மாதவன் கத்தும்போது கடைத்தெருவிலெ உள்ள பெரிய பெரிய ஓட்டல்காரர்களெல்லாம் குலை நடுங்குவார்கள்!

நீண்டகாலமாக ஓட்டல் நடத்திவரும் பெரிய பெரிய ஓட்டல்காரர்களெல்லாம் ஹெல்த் இன்ஸ்பெக்டர் மாதவனை லஞ்சம் கொடுத்து வஞ்சக வலையில் சிக்க வைக்க முயற்சித்தனர்; ஆனால் முடியவில்லை.

மாதவன் எந்த லஞ்ச லாவண்யத்திற்கும் மசியவில்லை; பெரிய ஓட்டல் முதலாளிகளின் வலையிலும் சிக்கவில்லை. அவன் தானுண்டு... தன் வேலையுண்டு என நேர்மையாகவே வாழ்ந்து வந்தான்.

நேர்மையாக வாழ்ந்து வந்த மாதவனுக்கும் அவனது மனைவி மரகதத்திற்கும் ஓர் அன்பு மகள்! மாதவனும் மரகதமும் தம் மகளுக்கு அன்பாய் ஆசையாய் வீணா எனப் பெயர்சூட்டினர்!

ஆமாம், வீணா +2 வகுப்பு படித்த பின்பு மேற்கொண்டு படிக்க கல்லூரிக்குச் செல்லவில்லை. தான் உண்டு; தன் வீடு உண்டு என்று அமைதியாகவே வாழ்ந்துக்கொண்டிருந்தாள்.

வீணாவின் அமைதிப் போக்கும் எவரிடமும் அதிர்ந்துப் பேசாத இனிய குணமும், திருச்சி வட்டாரத்தில் வாழ்ந்த உற்றார் உறவினர்களைப் பெரிதும் கவர்ந்தது. குறிப்பாக, ராஜம்மாளுக்கு அமைதியும் பொறுமையுமான வீணாவின் மீது பெரும் நாட்டமே இருந்தது.

ராஜம்மாள், தன் மகள் கனகாவிடம் “ஏம்மா கனகா! உம் புள்ளை ராஜாவும் காலேஜ் படிப்பை முடிச்சிட்டு ஆபீஸ்லெ க்ளார்க்கா வேலைப் பாக்குறான். உம் புள்ளை ராஜாவுக்கும் கல்யாணம் பண்ற வயசாகுதே! ஒரு பொண்ணைப் பாக்குற உத்தேசம் ஒனக்கில்லியா?” என்று பூடகமாய்ப் பேச்சைத் தொடங்கினாள்.

“ஆமாம்மா, நீ சொல்ற மாதிரி நம்ம ராஜாவுக்கு ஓரளவு நகைநட்டுப் போடற மாதிரி நல்ல வசதியானப் பொண்ணா பாக்கனும்.”

“இதோ பாரு கனகா! நம்ம சொந்தத்திலியே அதுவும் உள்ளூர்லியே வீடும் வாசலும் கார் வசதியோட இருக்கிற நம்ம மாதவனை மறந்துட்டியா?”

“என்ன, கார் வசதியோடு... அதுவும் உள்ளூர்லியேவா? அம்மா! நீ யாரைச் சொல்றேம்மா?” என்று கனகா தன் தாய் ராஜம்மாளைப் பார்த்து கேட்டாள்.



“ஏம்மா கனகா! நம்ம ஹெல்த் இன்ஸ்பெக்டர் மாதவனை மறந்துட்டியா?”

”முக்கும் முழியுமா ஒரே பொண்ணு இருக்கிற வீடும் வாசலும் மாதவனுக்கும் மரகதத்துக்கு அப்புறம் அவுங்கப் பொண்ணு வீணாவுக்கு தானே கெடைக்கப் போகுது!”

“ஆமாம்மா! நீ சொல்றது நூத்துக்கு நூறு உண்மைதாம்மா”

“ஏம்மா, வூட்டுக்குள்ளியே பொசுக்கு பொசுக்குன்னு உக்காந்திருக்கிற நீ எப்படிம்மா சேலத்துப் பொண்ணுங்களைப் பத்தியும் அலசுறே! புதுச்சேரி, பண்ருட்டி பொண்ணுங்களோட லிஸ்டையும் வெச்சிட்டுக் கலக்குறே?”

“எல்லாம் டப்புடி... டப்பு... டப்பு லேக்கப்போத்தா வாடு தெப்புடு தெப்பு! இப்ப ஹெல்த் இன்ஸ்பெக்டர் மாதவனை எடுத்துக்கோ! கறிவேப்பிலை கொத்தாட்டம் ஒத்தைப் பொண்ணு! அதுமட்டுமா? வீணா மூக்கும் முழியுமா மகாலஷ்மியாட்டம் இருக்கா! சொந்தத்திலெ வீடு வாசல் இருக்கு. மாதவனும் ஹெல்த் இன்ஸ்பெக்டரா அரசாங்க உத்தியோகத்திலெ இருக்கான்! இப்படிப்பட்ட ஒரு வசதியான மருமகளை உம் புள்ளை ராஜாவுக்கு வளைச்சிப்போடாமெ போறியா, கனகா?”

✶✶✶

“ஏம்மா, என்னைப் படுத்தறே? ஹெல்த் இன்ஸ்பெக்டர் மாதவன் பொண்ணு ஓ.கே. ஆனா, உம் பொண்ணு கனகாவோட பையன் ராஜாவுக்கு அந்த ஹெல்த் இன்ஸ்பெக்டர் குடும்பத்திலிருந்து நகை நட்டு எத்தனை பவுன் போடுவாங்கன்னு தெரிஞ்சிகிட்டா நல்லதுதானே?”

“த்தோ... பாரு கனகா, நீ ஒன்னும் கவலைப்படாதே. அதெல்லாம் உன்னோட அம்மா இந்த ராஜம்மா பாத்துப்பா!”

“எம் பேரன் ராஜாவுக்கு என்ன கொறச்சல்? மூக்கும் முழியுமா ஸ்பென்சர் கம்பெனி கேக் மாதிரி இருக்கான்! பத்தாததுக்கு... அரசாங்கத்திலெ கிளார்க் உத்தியோகத்திலெ இருக்கான்! அதனாலெ கனகா, நீ ஒன்னும் கவலைப்படாதே. வரதட்சணைப் பேரிலெ நகை நட்டு சீர் வரிசைன்னு உம் புள்ளை ராஜாவுக்கு மேக்சிமம் எவ்வளவு கறக்க முடியுமோ? அவ்வளவையும் கறந்துடலாம்! இந்த ராஜத்தை எளக்காரமா நெனெக்காதே. நான் ஓட்ட கறந்துடுற பூதகி, கனகா... பூதகி!”

“அதுதான் இந்த ஜில்லாவுக்கே தெரியுமே, அம்மா!”

✶✶✶

ராஜம்மாவும் கனகாவும் நெருங்கிய சொந்த பந்தத்தோடு ஒரு நல்ல நாளில் மாதவன் மற்றும் மரகதம் வீட்டிற்குப் போனார்கள்.

“ஏம்மா மரகதம், நம்ம வீணா எப்படி இருக்கா? கண்ணிலியே காட்டமாட்டேங்கிறியே?”

“வாங்க, ராஜம்மா அக்கா! வீணாவுக்கு என்ன கொறைச்சல்? அவ எம்ப்ராய்டரி வேலைப் பார்த்துகிட்டு அமைதியா இருக்கா? இதோ நம்ம வாசல்லெ தொங்கற குழலூதும்

கண்ணன் திரைச்சீலை நம்ம வீணா தன் கையாலே செய்ததுதான்!"

"ஆஹா! அற்புதமா இருக்கு மரகதம்! ஆமா மரகதம் குழலூதும் கண்ணன் திரைச் சீலையில் மட்டும் இருந்தா போதுமா? அந்த கள்ளக் கண்ணனை தேடிப்பிடிச்சி நம்ம வீணாவோடு ஒண்ணு சேர்க்க, மாதவனும் நீயும் ஆக வேண்டிய வேலையைப் பார்க்க மாட்டிங்களா?"

"ராஜம்மா அக்கா, பெரியவங்க நீங்க எல்லாம் இருக்கும்போது நடக்க வேண்டிய சுப காரியங்கள் தானாவே நடக்கும்.

"த்தோ பாரு மரகதம், எம் பொண்ணு கனகாவோட பையன் ராஜா டிகிரி முடிச்சிட்டு அரசாங்கத்திலே கிளார்க்கா இருக்கான். ஆபீசர்ஸுங்க மத்தியிலே நல்ல பேரு இருக்கு! வெகு சீக்கிரத்திலே பிரமோஷனும் கெடைச்சிடும்" என்று ராஜம்மாள் சற்று உரத்தக் குரலில் கத்திப் பேசினாள்.

"மரகதம், த்தோ... இந்த போட்டோவிலே இருக்குற மாப்பிள்ளைதான் எம் பேரன் ராஜா" என்று கூறிய ராஜம்மாள் பேரனுடைய போட்டோவை மாதவனிடமும் மரகதத்திடமும் காட்டினாள்.

"ஹூம்... மாப்பிள்ளையை நான் ஏற்கனவே பாத்திருக்கேன், அக்கா! பொண்ணு வீட்டு சார்பா நாங்க மாப்பிளைக்கு 20 சவரன் நகைப் போட்டுடறோம். வழக்கமா தரவேண்டிய சீர் வரிசைகளை செய்துடறோம்" என்று மாதவன் கூறியவுடன்

ராஜம்மாள், "இதோ பாருங்க மாதவன்! எம் பேரன் ராஜா கூடிய சீக்கிரத்திலியே... L.D.C யிலிருந்து U.D.C.யா ப்ரமோஷன் ஆகப்போறான். அதாலே... 30 சவரன் நகைப் போடுங்க"

"சம்பந்தியம்மா! பொண்ணு வூட்டு சார்பா 25 சவரன் நகைப் போட்டுடறோம். தயவுசெஞ்சி, நீங்க அதைப் பெரிய மனசுப் பண்ணி ஏத்துக்கணும்" என்றாள் மரகதம்.

"மரகதம், இருக்குறது ஒரேயொரு பொண்ணு பேரம் பேசாமெ நம்ம மருமக வீணாவுக்கு 30 சவரன் நகைப் போட்டுடுங்க" என்றாள் ராஜம்மாள் கறாராக.

தர்மசங்கடத்திலிருந்த மாதவன்... மறுப்பேச்சு பேசாமல் 30 சவரன் நகைக்கு சம்மதம் தெரிவித்தான்.

***

திருமணம் சிறப்பாக நடந்தேறியது! மாதவனும் மரகதமும் வாயில்லாப் பூச்சியாக இருந்ததால் மாப்பிள்ளை ராஜாவின் அம்மா கனகா சட்டுன்னு மருமகன் ராஜாவுக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்காவிட்டாலும்... பாட்டி ராஜம்மா தன் பேரனுக்காக புல்லட் வேண்டுமென்று சற்றும் வெட்கமில்லாமல் கேட்டாள்.

வீணாவின் பெற்றோரும் மறுப்பு கூறாமல் மருமகன் ராஜாவை தம் உள்ளங்கையில் வைத்து தாங்கினார்கள்.

பாவம், வீணா! தம் மாமியார் வீட்டில் மிகவும் சிரமப்பட்டாள். வீணாவின் மாமியாரின் தந்தை

விஸ்வநாதன் அறுபது வயதானவர். கட்டுமஸ்தான உடல். அவர் எப்போதும் தம்மை 'கேப்டன் ஆஃப் தி ஷிப்' என்று தான் நினைப்பார்.

காலையில் விடிந்தும் விடியாததற்கும் முன்பே வீணா, வீணா என்று முதல் அழைப்பு விடுப்பவர். கனகாவின் தந்தை கேப்டன் விஸ்வநாதனாகத் தான் இருக்கும். அவருக்கு ஒரு பெரிய அண்டா நிறைய வெந்நீர் காய்ச்சித் தரவேண்டிய பொறுப்பு வீணாவினுடையது.

வெந்நீர் ஆவிப் பறக்க பறக்க கொதிக்க வேண்டும். இல்லாவிட்டால், கேப்டன் ஆஃப் தி ஷிப் ருத்ரதாண்டவம் ஆடுவார்.

இரண்டாவதாக, வீணாவின் மாமனார். கனகாவின் கணவர். கனகா அவரை வேண்டுமென்றே 'வெட்டி ஆபீசர்' 'வெட்டி ஆபீசர்' என்று கூறிதான் வெறுப்பேற்றுவார். அந்த வெட்டி ஆபீசருக்கும் குளியல் வெந்நீரில் தான். எனவே, புதிதாக வந்த மருமகள் வீணாவின் தலையெழுத்து அந்த வெட்டி ஆபீசருக்கும் மீடியம் வெப்பத்தில் வெந்நீர் காய்ச்ச வேண்டும்.

மூன்றாவது குளியல் வீணாவின் மாமியார் கனகா. கனகாவும் வெந்நீரில் தான் குளிப்பாள். ஆனால், வெந்நீரை ஆவிப் பறக்க காய்ச்சாமல் வெதுவெதுவென்ற வெப்பத்தில் இளஞ்சூட்டில் நிறுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால், வீணாவின் மாமியார் கனகா மருமகளை பேயோட்டி விடுவாள்.

வீணாவிற்கு கணவனாக வாய்த்த ராஜா ஒரு சுக போகி! தன் இளம் மனைவி வீணா லேசாக சூடான வெதுவெதுப்பான வெந்நீரை ஒவ்வொரு குவளையாக மொண்டு ராஜாவின் முதுகில் ஊற்றி அவனுடைய உடலைத் தன் பூங்கரத்தால் இதமாகத்தடவிக்கொண்டே இருக்கவேண்டும்! அவனுக்கு மைசூர் சந்தன சோப்பை தான். பயன்படுத்த வேண்டும். கேப்டன் விஸ்வநாதனுக்கு எப்போதும் லைஃப் பாய் சோப்.

கனகாவிற்கு லிரில் சோப்! சோப் மாறிவிட்டால் பத்ரகாளி தான்!

மாமனார் வெட்டி ஆபீசரின் சோப் பியர்ஸ்.

இப்படி ஒரே வீட்டில் ஒன்பது பைத்தியங்கள்! பாவம் வீணா! சின்ன சிட்டுக் குருவியின் தலையில் ஒரு பெரிய பனங்காயை வைத்த கதைதான்!

***

காலைப் பிரச்சனை... அத்துடன் முடிந்ததா? குடும்பத்தின் கேப்டன் ஆஃப் தி ஷிப் விஸ்வநாதன் அவர்களுக்கு வீணா சூடான சுக்கு காபி தயாரிக்க வேண்டும்.

வெட்டி ஆபீசர் மாமனாருக்கு நா மணக்க நரசூஸ் காபி ரெடி செய்ய வேண்டும்.

மாமியார் கனகாவிற்கு ப்ரூ தான் பிடித்த பானம்!

வீணாவின் கணவன் ராஜாவிற்குப்பிடித்ததோ சன் ரைஸ் காபி தான். வீட்டிற்குப் புதிதாக வரும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கடைத்தெருவில் புதிதாய் விற்பனைக்கு வந்திருக்கும் லெவிஸ்டா காபி அல்லது லியோ காபி. பாவம் வீணா மனம் பேதலித்துப் போனாள்.

அவளுக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது! அடுத்து காலைச் சிற்றுண்டி விவகாரம். கேப்டன் விஸ்வநாதன் அவர்களுக்கு இட்லி தான் பிடிக்கும். மாமியார் கனகாவிற்கு தினமும் ரவா தோசை தான். நைவேத்தியம் நடக்க வேண்டும். வெட்டி ஆபீசர் மாமனாருக்கு சூடாக கல் தோசை, இடியாப்பமும் தேங்காய்ப் பாலும் தினமும் இருந்தாக வேண்டும். பாவம், வீணா!

அவளுக்கு சமையலறைக்குள் நுழையும்போதே தலை சுற்றத் தொடங்கிவிடும்! ஒரு பக்கம் புதிய மாமியார் வீடு! குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு விதம்!

'ஆன்னா' 'ஊன்னா...' சப்தம் தான். ரகளை தான்! காட்டுக் கத்தல் தான்! வீணா நிலைக் குலைந்துப் போனாள்! விர்ரென்று காய்ச்சல் வந்துவிட்டது! இனம் தெரியாத ஒரு பயம் வீணாவின் மனதில் தொற்றிக் கொண்டது.



மனதிற்குள் என்னவென்று சொல்லத் தெரியாத ஒரு பீதி ஆட்டிப் படைத்தது. வீணாவிற்கு மேனி நடுங்கியது; முகமெல்லாம் வேர்த்துக் கொட்டியது! லேசாக வந்த காய்ச்சல் வீணாவை படுக்கையில் வைத்துவிட்டது.

கனகாவின் தாய் ராஜம்மாள் வந்தாளோ இல்லையோ... நோய்க் கோழி என்று நாமகரணமே சூட்டிவிட்டாள்! நாட்டாண்மை செய்யும் ராஜம்மாளின் வீணானக் கத்தலும் எரிச்சலும் வீணாவிற்குக் கட்டோடுப் பிடிக்கவில்லை.

அவள் தன் தாய் மரகதத்திற்கு போன் செய்து வரச்சொல்லி சட்டென்று தாய் வீட்டிற்குப் பறந்துவிட்டாள். மாதவனும் மரகதமும் விவரம் புரியாமல் விழித்தார்கள். வீணாவிடம் துருவித் துருவிக் கேட்டு விசாரித்தபோது தான் அந்த விசித்திரக் குடும்பத்தின் பைத்தியக்காரத் தனமே புரிந்தது.

மிரண்டு போன வீணா மறுபடியும் மாமியார் கனகாவின் வீட்டிற்குச் செல்ல முரண்டு பிடித்தாள். ஏதோ இனம் தெரியாத ஒரு பீதியும் பயமும் வீணாவின் மனதில் ஏற்பட்டுவிட்டது!

பாவம் மாதவன்! செல்லமாக வளர்த்த தன் பெண் வீணாவை மருத்துவரிடம் கௌன்சிலிங்கிற்காக அழைத்துப் போனார். அதற்குள், டமாரம் ராஜம்மாள் வீணாவைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி கதைக்கட்டிவிட.... பேதை வீணா மனம் சலித்து விட்டாள். மண வாழ்க்கையே வெறுத்தது!

நாள் கணக்காய், மாதக் கணக்காய், ஆண்டுக் கணக்காய் தாய் வீட்டிலேயே இருக்கத் தொடங்கிய வீணாவின் வாழ்வு வினாக் குறியாய் மாறியது! சுருங்கச் சொன்னால் வீணாகிப் போனது!●

ஆசைகள்

➲ தி.ஹேமலதா

ஆசைதான்
வானத்தில் பறக்க அல்ல
பிறரின் வலைகளில் சிக்காமலிருக்க

ஆசைதான்
புன்னகை முகத்தைக்காட்ட
உண்மை கோபத்தை எதிர்கொள்ள

ஆசைதான்
ஏற்ற இறக்கமில்லா
வாழ்க்கையை வாழ

ஆசைதான்
ஒரே ஒருநாள்
சமமான உரிமைகளைப் பெற

ஆசைதான்
ஆளுமையற்ற
உலகில் வாழ

ஆசைதான்
என் கவிகளை
புத்தகங்கள் பேச

ஆசைதான்
என் மரணத்தை
நானே ரசிக்க

ஆசைதான் - எல்லாம்
ஆசைதான்
நிறைவேறாத
நிறைவு ஏறாத
ஆசைதான். ●

ஔவை நடராசன் மறைவுக்கு தலைவர்களின் இரங்கல்

1992 முதல் 1995 வரை தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், செம்மொழி தமிழ் உயராய்வு நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் பதவி வகித்த ஔவை நடராசன் தம் 87ஆம் வயதில் உடல்நலக் குறைவால் சென்னையில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் காலமானார்.

மாண்புமிகு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் இரங்கல்

முக்கிய கல்வியாளரும் பத்மஸ்ரீ விருது பெற்றவருமான அவ்வை நடராஜனின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது

பாமக நிறுவனர் ராமதாஸ்:

"தமிழ் வளர்ச்சிக்கும், கல்விக்கும் மிகச் சிறந்த பங்காற்றியவர் அவ்வை நடராசன். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அவர் எழுதியிருக்கிறார். அரசின் சார்பிலும், அரசியல் கட்சிகளின் சார்பிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட பெரும்பான்மையான முன்னெடுப்புகளில் பங்களித்தவர் நடராசன்.

தமிழறிஞர் அவ்வை நடராசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், கல்விச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாமக சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்".

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ:

"பேரறிஞர் அண்ணாவின் மீது அளவற்ற மதிப்பும், அன்பும், ஈடுபாடும் கொண்டிருந்த ஔவை நடராசன் பேச்சுக் கலையில் அண்ணாவையே முன்மாதிரியாகக் கொண்டிருந்ததை பெருமையுடன் குறிப்பிடுவார்.

மேனாள் முதல்வர்களான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், செல்வி ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் தமிழ் மாநாடுகளை நடத்துவதிலும், தமிழ் வளர்ச்சிக்கு பல வகையிலும் பணியாற்றுவதிலும் முத்திரை பதித்த பண்பாளர் ஒளவை நடராசன் ஆவார்.

தமிழ் மொழிக்காவும், தமிழர் நலனுக்காகவும் தொண்டறம் தொடர்ந்து தமிழ் இமயமாக வாழ்ந்து நம் நெஞ்சில் நிறைந்தவர் ஒளவை நடராசன். அவரது மறைவால் துயரில் இருக்கக்கூடிய அவரின் குடும்ப உறவுகளுக்கும், தமிழ் நெஞ்சங்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

இந்திய கம்யூ. கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன்:

"புலிக்கு பிறந்தது பூனையாகாது" என்ற முதுமொழியின் இலக்கியமாக வாழ்ந்தவர். தமிழ்நாட்டின் சிறந்த கல்வியாளரான ஒளவை நடராசன் உயர்கல்வியில் முதுமுனைவர் பட்டம் பெற்றவர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். இரு மொழிகளிலும் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். மிக நல்ல பேச்சாளர். தமிழாய்வு உலகில் பிரகாசித்து வந்த ஒரு சுடரொளி மறைந்து விட்டது. இது தமிழாய்வு உலகில் ஏற்பட்டிருக்கும் பேரிழப்பாகும் அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்"

காங்கிரஸ் எம்.பி. சு.திருநாவுக்கரசர்:

"முதுபெரும் தமிழறிஞர் அவ்வை நடராசன் தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவர். மிகச் சிறந்த எழுத்தாளர். ஒப்பற்ற தமிழ் பேச்சாளர். தமிழ் இலக்கியங்களில் எல்லையற்ற ஈடுபாடும் ஆழமான அறிவும் நிறைந்தவர். தன் வனப்புமிகு பேச்சாற்றலால் மக்களை கட்டி போட்டவர் கவர்ந்தவர். அன்னாரின் மறைவு தமிழுக்கு பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் தமிழ்ச் சான்றோர் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எனது அனுதாபத்தை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்"

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்:

"மூத்த தமிழறிஞர் ஒளவை நடராசன் அவர்களது மறைவு தமிழாராய்ச்சிப் பணிகளுக்கு பெரும் இழப்பு ஆகும். அவ்வை நடராசனின் தமிழ் மற்றும் கல்விப் பணிகளை நான் அறிவேன். தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்கள், மருத்துவர் அய்யா ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர். அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்:

முதுபெரும் தமிழறிஞர் பத்மஸ்ரீ முனைவர் ஒளவை நடராசன் அவர்கள் காலமானார் என்ற செய்தியறிந்து வருத்தமடைந்தேன். புரட்சித்தலைவர் எம்ஜிஆர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றிருந்த நடராசன் அவர்கள், ஆற்றிய தமிழ்ப் பணிகள் என்றும் நிலைத்திருக்கும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா:

"தமிழறிஞர் அவ்வை நடராசன் 1975ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநராகவும், 1984 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இல்லாமல் அரசுத் துறைச் செயலராக முதன் முதலில் நியமிக்கப்பட்டவர் அவ்வை நடராசன் என்ற பெருமைக்குரியவர்.

உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர். உடல்நிலை காரணமாகவும் வயது மூப்பு காரணமாகவும் உயிர்நீத்தார் என்ற செய்தி அறிந்து மிகவும் துயருற்றேன். அவரைப் பிரிந்து வாழும் அவரது குடும்பத்தினர்களுக்கும் உறவினர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" ●

தஞ்சைப் தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப் பேரறிஞர் அவ்வை நடராசன் படத்திறப்பு



தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப் பேரறிஞர் அவ்வை நடராசன் படத்திறப்பு

தஞ்சை தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப் பேரறிஞர் அவ்வை நடராசன் படத்திறப்பினை 26.4.2023 புதன்கிழமை அன்று டாக்டர் எம்.ஜி.ஆர் நிகர் நிலை பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் ஏ.சி. சண்முகம் திறந்து வைத்தார்.

மகாகவி பராதி விருது பெற்ற அவ்வை அருள் தன் தந்தையின் உருவப்படம் திறப்புக்கு நன்றி தெரிவித்தார். மேலும், அவ்வை சண்முகத்தின் குடும்பத்தோடு தங்கள் குடும்பத்துக்கு இருக்கும் உறவை வெளிப்படுத்திய அருள், கல்வியாளர் ஏ.சி. சண்முகத்தின் பரோபகாரம், தொண்டுள்ளத்தைப் பாராட்டினார்.

அவ்வை அருள், திரைப்பட இயக்குநர் மௌலி, ஆர். பாண்டியராஜன், காந்தி கண்ணதாசன் உட்பட 14 பேருக்கு 'கலை மேதைகள்' எனும் விருதினை நீதிபதி எஸ். பாஸ்கரன் வழங்கினார்.

சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம் சார்பில் பத்மஸ்ரீ அவ்வை டி கே சண்முகத்தின் 111ஆவது பிறந்தநாள் விழா மயிலை ராகசுதா அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தலைமை வகித்த தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி பாஸ்கரன் விருதுகளை வழங்கி வாழ்த்தினார். •



சிந்தனைச் சாரல்

அருவிப் பதிப்பகம்

1. வாழ்வில்
உயரும் வரை
காதை மூடிக்கொள்ள வேண்டும்;
உயர்ந்த பின்
வாயை மூடிக்கொள்ள வேண்டும்

2. பறவைகளின்
நிம்மதியை கெடுக்க
ஒரு கல் போதும்;
மனிதர்களின்
நிம்மதியை கெடுக்க
ஒரு சொல் போதும்

3. எல்லோர் வாழ்வும்
ஒரு மெழுதுவர்த்தி போன்றது.
தூரத்திலிருந்து பார்த்தால்
ஒளி மட்டும் பிரகாசமாகத் தான் தெரியும்;
அருகே சென்று பார்த்தால்தான்
அவர்கள் உருகிக் கண்ணீர்
வடிப்பது தெரியும்

4. வாழ்வின் முற்பகுதியில் வெல்ல
சுறுசுறுப்பும் ஊக்கமும்
தேவை.
பிற்பகுதியில் வெல்ல
பொறுமையும் தன்னடக்கமும் தேவை

5. வாழ்வில் நல்லது நடந்தால்
அதற்கு நானே காரணம்
என்பதும்,
கெட்டது நடந்தால்
அது மற்றவர்களால்
என்றும் பிதற்றக்கூடாது.
அனைத்திற்கும்
நாமே காரணம் என
பொறுப்பேற்போம்

6. எதையாவது கொடுத்து
நல்ல பெயர்
தொடர்ந்து வாங்க நினைத்தால்
அதை
கொடுக்கும் வரை தான்
நிலைக்கும் என
நினைவில் கொள்வோம்

7. ஆறுதல் என்பது
பிரச்சனைக்கு
தற்காலிக தீர்வு;
மாறுதல் என்பதே
என்றும் நிரந்தர தீர்வு •

மே தின வாழ்த்து!

➲ கவிஞர் சேலம் சங்கர் எம்.ஏ.,

விலா எலும்புகள் முறிய உழைத்தும்
விழாக்களைக் காணா தொழிலாளி
உலக அரங்கினில்
உலா வரத் தொடங்கிய தினமே
மே தினம்!

உழைக்கும் வர்க்கத்தின் முணங்கலே
உலக விடியலின் சங்கநாதம் என
அங்கீகரிக்கப்பட்ட தினமே
மே தினம்!

உழைக்கும் தோழனே!
கண்ணீரின் ஏகப் பிரதிநிதியே!
கரங்களை நீட்டிடு;
பாட்டாளி வர்க்கச் சங்கிலி அமைப்போம்;
முறுக்கேறிய கரங்கள் உயர்த்தி
உரிமை விடியலுக்கு ஆரத்தி எடுப்போம்!

புகை கக்கும் ஆலைகளே
நம் ஆலயம்!
அதன் சங்கொலியே
எம் பூபாளம்!
சம்மட்டிகள் எழுப்பிடும் ஓசைகளே
ஏழை வர்க்கத்தின் சங்கீதம்!

இரும்பை ஏந்தும் வர்க்கம் நாம் மண்ணில்
அமைப்போம் இனிய சொர்க்கமே!
நேர்மை எமது வழியாகும் கடும்
உழைப்பே எங்கள் மொழியாகும்!
பாட்டாளி மக்கள் கூட்டுறவே
நாளைய உலகின் ஒளியாகும்!

உழைக்கும் படைகள் நாம் வரட்டும்
ஆயிரம் தடைகள்தான்;
உடைப்போம் உடைப்போம் தடைகளை
தகர்ப்போம் முட்கள் வேலியை
இடிப்போம் இடரெனும் மதில்களை!

படைப்போம் புதிய யுகமே!
புதிய யுகமே! புதிய யுகமே!

நேற்று என்பது நிழலடா,
நாளை என்பது புதிரடா!
இன்று என்பதே நிஜமடா
உழைப்போம் நமக்கே ஜெயமடா! ●

வெள்ளியங்கிரி மலை

➲ கமலா மைந்தன்

வெள்ளியங்கிரி மலை யாத்திரை செல்ல நினைப்போர் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை மலை மீது ஏறுகின்றனர். அதன் பிறகு கடும் பனி மற்றும் குளிர் நிலவுவதால் பயணத்தை தவிர்க்கின்றனர். அதுமட்டமன்று, பிற காலங்களில் விலங்குகளின் நடமாட்ட,மும் அதிகம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

வெள்ளியங்கிரி மலையுச்சி வரை செல்ல முடியாதவர்கள் மலையடிவாரத்தில் உள்ள வெள்ளியங்கிரி நாதரை தரிசித்து விட்டுச் செல்கின்றனர். இம் மலை சுமார் 3500 அடி உயரமுடையது. இம் மலையின் ஆறு சிகரங்களைக் கடந்தால் ஏழாவது மலையில் சுயம்பு வடிவில் சிவன் வீற்றிருக்கும் காட்சி பெரும் மன நிம்மதியைத் தருகிறது.

இனிய யாத்திரைப் பிரியர்களே! உற்றார் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் மூட்டை முடிச்சுகள் எடுத்துக்கொண்டு வெள்ளியங்கிரி மலைக்கு யாத்திரை கிளம்பிவிட்டீர்களா?

நீங்கள் அனைவரும் வெள்ளியங்கிரி நாதரை தரிசித்துவிட்டு நல்லாசியுடன் திரும்புங்கள். ●





மேடையில் வீசிய மெல்லியப் பூங்காற்று

➲ ச. விஜய் ஆனந்த்

இளைஞர்களும் ஜனநாயகமும்

இளைஞர்கள் என்பவர்கள் யார்?
நாளைய சரித்திரத்தின் இன்றைய முன்னுரைகள்!
பொற்காலத்தை
உருவாக்கவுள்ள அற்புத சிற்பிகள்!
நவயுக பாரதத்திற்கு
இட்டுச்செல்லும் நெடுஞ்சாலைகள்!
அவர்கள் சரசரக்கும்
வெற்றுக் காகிதப் பூக்கள் அல்ல;
கமகமக்கும் மணமணக்கும்
அடுக்கு மல்லிப் பூச்சரங்கள்!
இளைஞர்கள்
உதயகாலத்தில் கிளம்பும்
பூபாள ராகம்!
இளைஞர்கள்
இருள் கப்பிய எதிர்காலத்தின்
வால் நட்சத்திரங்கள்!
மூங்கில் காடாய் கிடக்கும்
வெறும் நாட்டை
கீதமிசைக்கும் புல்லாங்குழல்கள் கொண்ட
திருநாடாக மாற்றும் விற்பன்னர்கள்!
காலத்தில் –
அவர்கள் வசந்தம்!
ராகத்தில்
அவர்கள் மோகனம்!
வலிவும் பொலிவும் மிக்க
இளைஞர்களின் கட்டுடலில் ஓடும்
இளஞ்சூடு ரத்தம்
பொங்கிப் பெருகும்
கங்கையின் துணையாறு என்றால்
மிகையாகாது!
சுருங்கச் சொன்னால்
“ஏடு தூக்கி பள்ளிக்கு
இன்று செல்லும் இளைஞரே
நாடு காக்கும் வீரராய்
நாளை மாறப் போகிறார்”



நாளைய உலகின்
நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கும்
இந்த இளைஞர்களை நம்பித்தான்
இந்த நாட்டின் ஜனநாயகமே இருக்கின்றது.
சுவரில்லாமல் சித்திரம் இல்லை.
தன்னம்பிக்கை மிக்க
இளைஞர்களில்லாமல்
ஜனநாயகமும் இல்லை.

வாசகர்களே!
ஜனநாயகமா
அப்படி என்றால் என்ன?
பணநாயகத்தின் நேர் எதிரி
பணநாயகம்
வட துருவம் என்றால்,
ஜனநாயகம்
என்பது தென் துருவம்.
பணநாயகம்
வாட்டுகின்ற வாடைக் காற்று!
ஜனநாயகமோ
தீண்டுகின்ற தென்றல் காற்று.
பணநாயகம்
ஆண்டான் அடிமை என்ற
மதில் சுவரை குறுக்கே எழுப்பும்.
ஜனநாயகமோ
"எல்லோரும் ஓர் எடை
எல்லோரும் ஒரு நிறை" என்ற
சமதர்மப் பூங்காவைச்
சமைத்துக் காட்டும்.
பணநாயகம்
மணிமுடிக்குத் துதி பாடும்;
ஜனநாயகமோ
மண் குடிசைவாசியின் சேவடி தேடும்.
ஆம், வாசகர்களே... ஆம்!
நாடும் ஏடும்
நித்தம் நித்தம் சத்தம் போட்டு பேசுகிறதே
Democracy... Democracy என்று,
அந்த Democracy தான் ஜனநாயகம்.
அந்த ஜனநாயகம் வளர்ந்தால் தான்
நாடு செழிக்கும்; ஒவ்வொரு
வீடும் தழைக்கும்.
இன்று
உலக அரங்கிலே மிகப் பெரிய
ஜனநாயக நாடு நமது இந்தியா.
இந்த ஜனநாயகம் என்ற
நறுமணப் பூ
1950 ஜனவரி 26ஆம் நாளன்று பூத்தது.
"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று
பாடினாரே பாரதி
அக்கனவு அன்று தான் நனவாயிற்று.

இந்த ஜனநாயகத் திருநாட்டில்
எவருக்கும் பேச்சுரிமை உண்டு;
எழுத்துரிமை உண்டு.
"அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு" என்ற
ஹைதர் கால மொழி
காற்றில் பறந்தது.
"தலைவாரி பூச்சூட்டி உன்னை பாடசாலைக்குப்
போயென்று சொன்னாள் உன் அன்னை"
என்ற பாடல் பிறந்தது.

முக்காடிட்டு மூலையில் முடங்கிக் கிடந்த மங்கையர்
இன்று கல்லூரி செல்கின்றனர்;
காரியாலயம் செல்கின்றனர். ஏன்?
ஆண்டுகள் பதினாறு இந்த இந்தியாவை
அகிலம் போற்றிட ஆண்டு
அழியாப் புகழ் பெற்றாரே அன்னை இந்திரா
அவரும் மாண்புறு மங்கைதான் என்பதை
மாநிலமே அறியும். இந்த
புதிய வாழ்வையும்
புதிய பாதைகளையும்
வகுத்துக்கொடுத்தது எது?
இந்திய நாட்டின் ஜனநாயகம் தான்.
1947 ஆகஸ்ட் 15இல் உதித்த
இளைய பாரதம் இணையற்ற
இனிய பாரதமாய்
கருவுற்று உருவுற்று திருப்பெற்ற பெருநாடாய்
வளரக் காண்கிறோம்.
அமெரிக்க நாட்டின் அண்ணல் என்றும்
அன்புத் தந்தை என்றும் அழைக்கப்படும்
ஆபிரகாம் லிங்கன் முழக்கமிட்டாரே
Democracy means
For the people,
Of the people,
By the people"
என்று அந்த இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாக
நமது இந்தியா நின்றொளிர்கிறது.

நம்மீது பொறாமை கொண்ட
அண்டை நாடுகள் மீது
எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.
அந்த நய வஞ்சக நரிகள்
நமக்கு நாச வலைகள் விரிக்க முயல்கின்றன.
இந்திய அன்னையின் மடியில் உள்ள
ஜனநாயகக் குழந்தையின் கழுத்தை நெறித்திட
நாள் பார்க்கின்றன. அவ்வப்போது,
போர் மேகங்கள் கூடுகின்றன;
வல்லரசு வல்லூறுகள் நீள்வட்டம் போடுகின்றன.
நாம் மக்கள் அணியைத் திரட்ட வேண்டும்.
அந்த ஓநாய் கும்பல்கள் ஓலமிட்டோட
விரட்ட வேண்டும்.
"சாதிகள் இல்லையடி பாப்பா"
என்ற வேத வாக்கைப் பரப்பி



பேதங்களை அகற்ற வேண்டும்.
"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்
அந்நியன் வந்திங்கு புகல் என்ன நீதி?" என்று
முழக்கமிட வேண்டும்.

வாசகர்களே!
வதந்திகளை புறக்கணிப்போம்.
வளமான சிந்தனைகளை வளர்ப்போம்.
தொல்லை எது வரினும்
நாட்டின் எல்லையைக் காப்போம்.
பிற்போக்கு குணமுடையவர்களுக்கு
முற்றுப்புள்ளி வைப்போம்.
காஷ்மீர் பள்ளத்தாக்கும்
கன்னியாகுமரியும் ஒன்று தான் என்று
நிரூபிப்போம் என வீரச் சபதமேற்போம்.
அப்போதுதான்,
இத்திருநாட்டில் ஜனநாயகம்
நிலைக்கும்; அதன் மூலம் தான்
இந்தியாவும் சிறக்கும். ●

எங்களது இனிய நல்வாழ்த்துக்கள்

சக்தி சர்க்கரை ஆலை

உயர்தர வெண்படிக சர்க்கரை, எரிசாராயம், எத்தனால், மின்சாரம், மாசு கட்டுப்பாடு உபகரணம் மற்றும் சோயா எண்ணெய் உற்பத்தியாளர்கள்

தலைமை அலுவலகம்
180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் - 641 018. தொலைபேசி: 0422-221551-54
www.sakthisugars.com

பதிவு அலுவலகம் / யூனிட் – I
சக்தி நகர் - 638 315, பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு

யூனிட் – 2
ஜோதிநகர், படமாத்தூர் - 630 561 சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு

யூனிட் – 3
கொரியன் அஞ்சல், ஹரிப்பூர் - 759 013. தென்கனல் மாவட்டம், ஒரிசா

யூனிட் – 4
பூந்துறை சேமூர், மொடக்குறிச்சி - 638 115. ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு

சக்தி சோயா டிவிஷன்

மார்ச்சிநாயக்கன் பாளையம், அம்பராம்பாளையம் அஞ்சல் - 642 103
பொள்ளாச்சி தாலுகா, தமிழ்நாடு

www.sakthisoyas.com

கவிஞன் என்பவன்...

➲ சசிகலா திருமால்



கவிஞன் என்பவன்
உள்ளுக்குள் இருக்கும் உணர்வுகளை
உறங்க விடாமல்
உலகமறிய உரக்கச் சொல்பவன்.

நாம் காணமுடியாத உலகம் தனை
தம் கற்பனையின் மூலம்
கவிதையாய் படைத்து
அதை நம் கண்முன்னே கொண்டு வந்து
விருந்து அளிப்பவன்.

கவிஞனாய் இருப்பதாலோ என்னவோ
கையோடு காகிதமும் எழுதுகோலுமாக
கண்ட இடமெல்லாம் நிற்பவன்

உறங்கும் போதும் விழிக்கும் போதும்
பேனாக் கொண்டே பேசுபவன்.

வரிகளை மறவாமல் இறக்கி வைக்கவே
பலநேரங்களில் அலைபேசியில்
கட்டைவிரல் தட்ட பிறக்குது
கவிதை சிசுக்கள்.

உதிரிப்பூக்களெனவே எழுத்துக்கள்....
அதை கவிதைப் பூக்களாய்
கவிஞன் தொடுக்கையில்
ஏட்டுப்பூக்களும் வாசம் வீசுகிறது.

உயிரும் மெய்யும் போலவே
கவிஞனும் கவிதையும்..
ஒன்றின்றி ஒன்றில்லை...

சொற்கூட்டு பறவைகளாய்
தேடி தேடி பிடித்த வார்த்தைகளனைத்தும்
தெளிவாய் பிறக்கும்
கவிதை சிசுக்களாய்.

தமிழ் தாகம் தீரா தமிழர்களுள்
நானும் ஒருவனாய் இருப்பது நிறைவு. •

மே 7 உலக சிரிப்பு தினம் பற்றி,,, ப்ளீஸ் கேளு!

மே மாதம் முதல் ஞாயிறு உலக சிரிப்பு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே, வரும் 7ஆம் தேதி உலக சிரிப்பு தினம் மலர்கிறது.

“வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்” என்பது பழமொழி. ஆனால், இந்த இயந்திர உலகில் நமக்கும் சிரிக்க நேரமில்லை. மற்றவர்களைச் சிரிக்க வைக்கவும் நேரமில்லை என்பது தான் உண்மை. எனவே, ஆண்டுதோறும் உலக சிரிப்பு தினம் என்ற ஒன்று கொண்டாடப்பட்டு, அன்றைய தினம் முடிந்தளவு மக்கள் ஆங்காங்கே ஒன்றாகக் கூடி சிரித்து மகிழ்கின்றனர்.

இத்தனைக்கும் இதை இந்தியாவின் மும்பையைச் சேர்ந்த டாக்டர் மதன் கதரியா என்பவர்தான் தொடங்கி வைத்தார். இவர் மும்பையைத் தலைமை இடமாகக் கொண்டு சர்வதேச நாடுகள் முழுக்க இயங்கி வரும் லாஃப்டர் யோகா இயக்கத்தைத் *(Laughter Yoga Moveement)* தொடங்கியவர். இப்பொழுது மதம், இனம் தாண்டி, இலாப நோக்கம் எதுவும் இன்றி இத்தினம் சந்தோஷமாக கொண்டாடப்படுகிறது.

முதல் உலக சிரிப்பு தின கொண்டாட்டத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மும்பையில் ஒரே இடத்தில் கூடி மகிழ்ந்தனர். இந்தியாவுக்கு வெளியே முதல் உலக சிரிப்பு தினம் 2000ஆம் ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்டது.

தற்போது உலகம் முழுவதும் லாஃப்டர் கிளப்கள் உருவாக்கப்பட்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் 60க்கும் மேற்பட்ட நாடுகளில் இதற்கென 6000க்கும் மேற்பட்ட கிளப்கள் செயல்படுகின்றன.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையோடு ஒப்பிடும் போது, இன்றைக்கு மன அழுத்தம் 10 மடங்கு அதிகரித்திருக்கிறது. இந்த அழுத்தம் சோம்பேறித்தனத்தை உருவாக்கி விடுகிறது. மேலும், அது தொடர்ந்தால் 70 முதல் 80 சதவீத நோய்கள் உருவாக அதுவே காரணமாக அமைகிறது.

அதுவும் குறிப்பாக, புற்று நோய் மற்றும் இருதய நோய்களுக்கு காரணமாக இருக்கிறது. உடலில் ஆக்ஸிஜனின் அளவை குறைத்து மந்தமாக்குகிறது. இவற்றிலிருந்து விடுபட சிரிப்பு மாமருந்தாக இருக்கிறது. நன்றாக வாய் விட்டு சிரிக்கும் மனிதன் ஆரோக்கியமானவனாகவும் இருக்கிறான். அவனை விட்டு எதிர் மறை எண்ணங்கள் பறந்து போய்விடுகின்றன என்பது யாதார்த்தமாகும். சிரிப்பு என்பதை ஒரு யோகக் கலை என்றும் கூட சொல்லலாம். இது உடம்புக்கும் மனதிற்கும் நல்லதாகும். எனவே, சிரிப்போம் சிந்திப்போம் சிநேகமாக வாழ்வோம். ஒவ்வொரு தினமுமே சிரிப்பு தினமாகக் கொண்டாடுவோமே. ●

வேலைவாய்ப்பு

சென்னை ஒருங்கிணைந்த சேவை மைய காலிப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

சென்னை ஒருங்கிணைந்த சேவை மையத்தில் காலியாக உள்ள வழக்குப் பணியாளர், பாதுகாப்பாளர், பன்முக உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேரமும் உடனடி மற்றும் அவசர சேவைகளை வழங்குவதற்காக பெண்கள் உதவி மையத்தை அமைக்க ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதில் ஒன்று ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC), பெண்கள் உதவி மையம் (181) போன்ற பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் முக்கிய அம்சமாக மருத்துவ உதவி, ஆலோசனை, சட்டம், உளவியல் மற்றும் உணர்வியல் ரீதியான ஆதரவு வேண்டியுள்ள ஒவ்வொரு மகளிரும் பயனடையும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் தொகுப்பூதிய / ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய கீழ்க்கண்ட தகுதிகள் மற்றும் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதவி - வழக்குப் பணியாளர் *(Case Worker)*: காலிப் பணியிடங்கள் -6

சமூகப் பணியில் இளங்கலை பட்டம் *(Bachelor's Degree in Social Work).*

உளவியல் ஆலோசகர் *(Counselling Psychology)* அல்லது மேலாண்மை வளர்ச்சியில் *(Development Management)* பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் அரசு மற்றும் அரசு சாராத திட்டங்கள் அல்லது திட்டங்களுடன் அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகத்தில் 1 வருட முன் அனுபவம் உடையவராகவும்,

உளவியல் ஆலோசனையில் ஒரு நிறுவனத்திலோ அல்லது வெளிப்பணிகளிலோ குறைந்த பட்சம் 1 வருட அனுவபம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

வயது 35க்குள் இருக்க வேண்டும். உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். வாகனம் ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும். மாத ஊதியம் ரூ.15,000/

பாதுகாப்பாளர்: *(Security Guard)* காலிப் பணியிடம் 1

மாத ஊதியம் ரூ.10,000/-

அரசு அல்லது புகழ்பெற்ற நிறுவனத்தில் பாதுகாப்புப் பணியாளராக பணியாற்றிய அனுபவம் மற்றும் உள்ளூரைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பன்முக உதவியாளர் *(Multi Purpose Helper)* (காலிப் பணியிடம் 1):

ஏதாவது அலுவலகத்தில் பணிபுரிந்த அனுபவம் உடையவராக இருக்க வேண்டும். விண்ணப்பதாரருக்கு சமையல் தெரிந்திருக்க வேண்டும்.

உள்ளூரைச் சார்ந்த பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மாத ஊதியம் ரூ.6,400/-

விரும்பும் பதவிகளுக்கு https://chennai.nic.in/என்னும் இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் உரிய சான்றிதழ்களுடன் 25.05.2023 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம். 8ஆம் தளம். சிங்கார வேலர் மாளிகை, இராஜாஜி சாலை, சென்னை 01 என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது chndswosouth@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ விண்ணப்பம் செய்யவும். •

Recognising best practices in delivering quality education in India

BHARATH UNIVERSITY AWARDED AS

The Best Multi Stream University in India

By — ASSOCHAM INDIA

In Association — Government of India PLANNING COMMISSION | Government of India MINISTRY OF HUMAN RESOURCE DEVELOPMENT | ASSOCIATION OF INDIAN UNIVERSITIES | NATIONAL SKILL DEVELOPMENT CORPORATION

ADVANTAGE

A leading Educational Group in India: The Bharath Educational Group, through its various Schools, Institutions and Universities, provides world class education to over 20,000 students from pre-school to Ph.D, across Tamilnadu.

Focus on Research: First University to launch research integrated B.Tech Course with state-of-the-art Research Park. 32 Research Centers & 7 Center of Excellence block covering 2 Lakhs Sq.ft. With a vision to create and maintain global standards in education, there is a sustained focus on Research and Training in various disciplines including Nanotechnology, Biotechnology and Space Technology.

Top Ranked: The Bharath Group Institutions, including Bharath University, School of Engineering, School of Health Sciences, School of Business School, School of Architecture, have been recognized for their global excellence, through innumerable countrywide surveys, which have also ranked and accredited them.

Govt Recognition: For their commitment to maintaining high standards of education, Bharath University has been recognized by UGC.

Cultural Diversity: Students from 23 different states of India and different countries come together at the Bharath Institutions to build and sustain responsible leadership.

World Class Infrastructure: Situated at prime locations, the Bharath Institutions have arguably the most hi-tech campuses with world class facilities for high end research.

Pride of placement: 30 years of education excellence has seen Bharath University place well over 35,000 students at globally reputed firms across the world.

Asia's largest Scholarship Programme: Over 1000 students have benefited from Bharath University's scholarships schemes, which in some instances have extended up to 100% grants. The University also offers smart and convenient education loan facilities.

CAMPUSES: CHENNAI & PUDUCHERRY : ENGINEERING | MEDICINE & HEALTH SCIENCES | MANAGEMENT | HUMANITIES & SCIENCE

India's first University to launch Research Integrated B.Tech Course

The Research Integrated B.Tech aims to develop the spirit of innovation in the future engineers of India.
All students who join the B.Tech Program at **Bharath University** shall be mentored towards publishing their ideas at relevant forums around the world. This enables the engineers of tomorrow to not only understand their course but contribute to it. Best in class infrastructure, Knowledgeable Faculty and Industry Friendly Curriculum are sure to act as your pillars for success.

For more details, please visit our website : www.bharathuniv.ac.in

இமயம்போல்

நீரை. அத்திப்பூ

(சே. அப்துல் லத்தீப்)

இவ்வையம் போற்றுகின்ற
இனியதமிழ்ப் பேரறிஞர்
எவ்வரங்கில் இருந்தாலும்
இமயம்போல் உரை வளர்த்தார்’
கவ்வி இழுக்கும்
கனிச்சுவைபோல்
கற்றறிந்தோர்
உள்ளம் நிறைக்கும் உணர்வாளர்;
அவ்வை நடராசன்
அற்புதக் குணக்குன்று
அன்னைதமிழ் விரும்பும்
அறிஞர்களில் முதல் என்று;.
ஒன்றி இருந்தார்
உயர்தனி இலக்கியங்கள்
என்றும் வளர்ப்பதற்கு
இறுதி வரை உழைத்திருந்தார்;
முனைவராய் இருந்த இவர்
முழுமைத் தமிழுணர்வால்
அனைவரின் உள்ளத்தும்
அணுவிலும் கலந்திருந்தார்;
தஞ்சைப் பல்கலைக் கழகத்தில்
நெஞ்சமெல்லாம் நிறைந்துழைத்தார்
விஞ்சும் புகழ்ச்சிறப்பால்
வெற்றிபல எட்டியவர்;
இதயங்கள் கதறியழ
எல்லோரின் விழிநிறைய
இறைவனடி சேர்ந்தார்
இயற்கையுடன் கலந்தார்.
படைத்தளித்த நூல்களிலும்
பார்போற்றும் உரைகளிலும்
அடைந்திருக்கும் உன்னதத்தால்
அருந்தமிழ்போல் வாழ்ந்திருப்பார்!
அன்னாரின் புகழ் வளர்க!
அன்னைதமிழ் அருள் நிறைக! ●

ஆரோக்கியம்

வெயில் தாக்கத்தால் ஏற்படும் தோல் நோய்களிலிருந்தது தப்பிப்பது எப்படி? வெயிலோடு சேர்த்து புறஊதா கதிர்களும் அதிக அளவில் வீசும்போது மக்களுக்கு அதிக தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அம்மை, முகப்பரு, அக்கி, கட்டி, தோல் அரிப்பு போன்ற பிரச்னைகள் அதிக வெயில் காரணமாக ஏற்படும் பாதிப்புகளாகும்.

இவை குறிப்பிட்ட சில நாள்களில் சரியாகிவிடும் என்றாலும் கூட அது ஏற்படுத்தும் பாதிப்புகள் நம்மை கடுப்படைய செய்துவிடும். எனவே இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்க சில வீட்டு மருத்துவ முறை இருக்கிறது. இதில் முதல் மருத்துவம் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதுதான். தண்ணீர் உடலில் நீரின் அளவை சரியாக பராமரிப்பதுடன் உடலில் சேரும் தேவையற்ற கிருமிகளை சிறுநீர் வழியாக வெளியே கொண்டுவந்துவிடும். எனவே தொற்று பாதிப்பு ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

அதேபோல நீர் சத்துக்கள் நிரம்பிய தர்பூசணி, எலுமிச்சை சாறு, முலாம்பழம், திராட்சை, இளநீர், மோர் போன்ற நீர் சத்து அதிகம் இருக்கும் உணவு பொருட்களை எடுத்துக்கொள்ளலாம். இந்த காலத்தில் பலரும் அடிக்கிற வெயிலில் ஜில்லுன்னு தண்ணீர் குடிக்கனும்னு நினைக்கின்றனர். ஆனால் அது உடல் நலத்திற்கு உகந்தது கிடையாது என சித்த மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். அதிகம் குளிரூட்டப்பட்ட தண்ணீரை விட சாதாரண வெப்பநிலையில் இருக்கும் தண்ணீரைதான் நம் உடல் அதிகம் எடுத்துக்கொள்ளும். நீர் எவ்வளவு அதிகம் எடுத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு உடல் சூடு குறையும். எனவே தாகம் எடுக்கும்போது குளிரூட்டப்படாமல் இருக்கும் நீரை பருக வேண்டும்.

கோடை காலங்களில் ஏற்படும் மிகவும் பொதுவான நோய்தான் அம்மை நோய். நோய் எதிர்ப்பு குறைவாக இருப்பவர்களிடம் இது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அம்மையில் சின்னம்மை மற்றும் தட்டம்மை என இரண்டு வகைகள் இருக்கின்றன. சின்னம்மை நோய் முதலில் வியர்குரு போல தொடங்கும். பின்னர் கொஞ்சம் பெரிய கொப்பளங்களாக மாறி அதில் நீர் கோர்த்துக்கொள்ளும். பின்னர் இதிலிருந்து நீர் வடிந்து கொப்பளங்கள் உதிர்ந்துவிடும். கொப்பளங்கள் இருந்த இடத்தில் தழும்புகள் இருக்கும். பின்னர் காலப்போக்கில் மறைந்துவிடும். பொதுவாக இந்த அம்மை பாதிப்பு ஒருமுறை வந்துவிட்டால் மீண்டும் அவர்களை தாக்காது.

இப்படி இருக்கையில் பலர் இந்த நோய் வந்துவிட்டால் பாதிக்கப்பட்டவரை சுற்றி வேப்பிலையை வைத்துவிட்டு சரியாகிவிடும் என்று கூறி அமைதியாகிவிடுகிறார்கள். வேப்பிலைக்கு வைரஸ்களை அழிக்கும் சக்தி கிடையாது. அம்மை என்பது வைரஸ்களால்தான் பரவுகிறது. எனவே வேப்பிலை மட்டுமே அம்மை நோயை குணப்படுத்திவிடாது. அம்மை வந்தால் கடுமையான உணவு கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும். இதை நாம் காலங்காலமாக பின்பற்றி வந்திருக்கிறோம். இளநீர், மோர், நீர்ச்சத்து நிரம்பிய பழங்கள் ஆகியவற்றை கொடுப்பது இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மீட்க உதவும். அதேபோல நோயின் தாக்கம் ஓரளவு குறைந்த பின்னர் எண்ணெய் சேர்க்காத வேகவைத்த உணவுகளை கொடுக்க வேண்டும். ஆயினும் பழச்சாறுகள், மோர், இளநீர் ஆகியவற்றை கொடுப்பதை நிறுத்திவிட கூடாது. நெல்லிக்காயை கொட்டை எடுத்துவிட்டு நன்றாக உலர்த்தி காய வைத்திருப்பது நெல்லி வற்றல் அல்லது நெல்லி முள்ளி என்று அழைப்பார்கள். இதனுடன் வேப்பிலையை சரிசமமாக அரைத்து வெண்ணெய் கலந்து உடலில் பூசினால் உடல் அரிப்பு நீங்கும். அதேபோல முருங்கை வேரை பாலில் கொதிக்க வைத்து தொடர்ந்து குடித்து வந்தால் இழந்த சக்தியை மீண்டும் பெறலாம். மேற்குறிப்பிட்ட மற்ற தோல் பிரச்னைகளுக்கும் வேப்பிலை சிறந்த தீர்வாக அமையும். ●

ஹால் மார்க் பற்றி அறிவோம்

मानकः पथप्रदर्शकः

ஹால்மார்க் என்பது விலையுயர்ந்த உலோகப் பொருட்களில், அந்த விலையுயர்ந்த உலோக பொருள் சேர்ந்துள்ள அளவின் துல்லிய மதிப்பு மற்றும் அங்கீகார பதிவாகும். தங்கத்தில் கலப்படம் செய்யாமல் விற்க வேண்டும் என்பதற்காக சுமார் 800 வருடங்களுக்கு முன் பிரிட்டனில் தான் முதல் முதலாக ஹால்மார்க் அறிமுகம் செய்யப்பட்டது. அன்றைய நகை வியாபாரிகள் சில உலோகங்களை தங்கத்துடன் எந்த அளவு சேர்கிறார்கள்? என்பதை எல்லோருக்கும் தெரியும்படி ஒரு ஹாலில் வைத்து நகை செய்தனர். ஹாலில் வைத்து தங்க நகைகளை செய்து அதன்பின் வியாபாரம் செய்வதால் தான் ஹால்மார்க் என்ற பெயர் இதற்கு வந்தது. இந்தியாவில், ஹால்மார்க் என்ற பொறுப்பை இந்திய தர நிர்ணய கழகத்திடம் இந்திய அரசு பொறுப்பை ஒப்படைத்துள்ளது. நாட்டின் பல்வேறு பாகங்களில் உள்ள இந்த கழகத்தின் அலுவலகம் தான் ஹால்மார்க் என்ற சோதனையை செய்கிறது. ஹால்மார்க் முத்திரை இடுவதற்கு ஐந்து பிரிவுகளை இந்திய தர நிர்ணய கழகம் நிர்ணயித்துள்ளது.

1. பிஐஎஸ் தர நிர்ணய கழகத்தின் சின்னம்.
2. தங்கத்தின் தன்மை அல்லது மாற்று. உதாரணமாக 22 காரட் தங்கத்தில் 916 முத்திரையும், 21 காரட் தங்கத்தில் 875 என்ற முத்திரையும் இடப்பட்டிருக்கும்.
3. ஹால்மார்க் செய்யப்படும் மையத்தின் சின்னம்.
4. நகைகள் செய்யப்பட்ட வருடம் ரகசியமாக குறிப்பிடப்பட்டிருக்கும்.
5. பிஐஎஸ் அங்கீகாரம் வணிகரின் சின்னம்.

ஹால்மார்க் செய்யப்பட்ட நகைகளில் மேற்கண்ட ஐந்து முத்திரைகளும் கண்டிப்பாக இருக்கும். சர்வதேச வர்த்தக அமைப்பான டபிள்யூடிஓ என்ற தங்க நகை ஏற்றுமதி செய்யும் 164 உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்பதால் இந்திய அரசு பிஐஎஸ் தரச்சான்றை கட்டாயமாக்கியுள்ளது. மேலும் பிஐஎஸ் ஹால்மார்க் முத்திரை பதித்த தங்க நகைகள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்ற விதியும் உள்ளது. •

அரசுக் கல்லூரியில் சேரும் வழிமுறை

தமிழ்நாட்டின் 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2023-24 கல்வி ஆண்டிற்கான இளநிலை பட்டப் படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 8ஆம் தேதி முதல் *www.tngasa.in* வலைத்தளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இணையதளம் மூலம் விண்ணபிக்க வாய்ப்பில்லாத மாணவ மாணவிகள் கல்லூரி உதவி மையங்கள் *(Admission Facilitation Centre AFC)* மூலம் விண்ணபிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் வலைத்தளத்தில் இருக்கிறது.

வலைத்தளம் மூலம் விண்ணப்பப் பதிவு தொடங்கும் நாள்: *08.05.2023*

இறுதி நாள்: *19.05.2023*

வாட்ஸ்அப் ஒரே நம்பரை 4 அலைபேசிகளில் பயன்படுத்தலாம்

வாட்ஸ் அப் அக்கவுண்ட்டை ஒரே நேரத்தில் நான்கு போன்களில் பயன்படுத்தும் வகையில் புதிய வசதியை மெட்டா நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. மெட்டா தலைமை செயல் அதிகாரி மார்க் ஸூக்கர்பர்க் இதனை ட்விட்டரில் அறிவித்துள்ளார்.

வாட்ஸ்அப் ஆப்பில் கடந்த ஆண்டு கம்பானியன் மோட் அம்சம் அறிமுகம் செய்யப்பட்டது. அதன்படி இரண்டு ஃபோன்களில் ஒரே நேரத்தில் வாட்ஸப் பயன்படுத்தும் வசதி வழங்கப்பட்டது. இந்நிலையில், தற்போது ஒரு வாட்ஸ் அப் அக்கவுண்டை நான்கு போன்களில் பயன்படுத்தலாம் என்று அறிவித்துள்ளது. அதாவது இனிமேல், ஒரு வாட்ஸ் அப் எண்ணை ஒரே நேரத்தில் நான்கு போன்களில் லாக்-இன் செய்யலாம்.

சிலமாதங்களுக்குமுன்னர்பீட்டாவெர்ஷனில் இந்த அம்சம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பயனர்கள் தங்களது வெவ்வேறு போன்களில் தங்களது ஒரே வாட்ஸ்அப் அக்கவுண்ட்டை பயன்படுத்தலாம். அதாவது ஒரே மொபைல் நம்பர் கொண்ட வாட்ஸ்அப் அக்கவுண்ட்டை அதிகபட்சம் 4 சாதனங்களில் பயன்படுத்த முடியும். 4 போன்கள் வரை : லிங்க் செய்யப்பட்ட போன் ஒவ்வொன்றும் தனித்தனியே வாட்ஸ்அப் உடன் இணைந்திருக்கும். இதன் காரணமாக மெசேச், மீடியா, அழைப்புகள் என அனைத்துமே எண்ட்-டு-எண்ட் என்க்ர்பிட் செய்யப்படுகிறது. பிரைமரி மொபைல் போன் 14 நாட்களுக்கும் அதிகமாக பயன்படுத்தப்படவில்லை எனில், மற்ற சாதனங்களில் இருந்து வாட்ஸ்அப் தானாக லாக் அவுட் ஆகிவிடும். தற்போது வாட்ஸ்அப் கியூஆர் கோட் மூலம் பிரைமரி சாதனத்தில் இருந்து மற்றொரு சாதனத்தில் வாட்ஸ்அப்பை இணைக்கும் வசதி வழங்கப்பட்டு இருக்கிறது. வரும் வாரங்களில், வாட்ஸ்அப் வெப் தளத்தில் உங்களின் மொபைல் நம்பரை பதிவிட்டு அதன் பின் மொபைல் நம்பருக்கு வரும் ஓடிபி மூலமாக எளிதாக லின்க் செய்துவிட முடியும். எதிர்காலத்தில் லிங்க் செய்யக்கூடிய சாதனங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வாட்ஸ்அப் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குரூப் அட்மின் ஒப்புதல் இன்றி, புதிய நபர்கள் குழுவில் இணைய முடியாது. இந்த புதிய அப்டேட்டை ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் வெர்ஷன்களில் வெளியிட உள்ளது. •

ROYAL ENFIELD

ராயல் என்பீல்டு நிறுவனம் எலெக்ட்ரிக் வாகனங்களை உற்பத்தி செய்ய புதிய ஆலையை கட்டமைக்கிறது

ராயல் என்பீல்டு நிறுவனம் தமிழ் நாட்டில் புதிதாக உற்பத்தி மையம் ஒன்றை துவங்க இருப்பதாக கூறப்படுகிறது. வாகன உற்பத்தி மற்றும் எலெக்ட்ரிக் வாகனங்கள் பிரிவில் அதிக கவனம் செலுத்த ராயல் என்பீல்டு திட்டமிட்டுள்ளது. இதற்காக ராயல் என்பீல்டு நிறுவனம் சென்னையை அடுத்த செய்யாறு பகுதியில் சுமார் 60 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை கையகப்படுத்திவிட்டதாக கூறப்படுகிறது. அடுத்த 12 முதல் 24 மாதங்களில் ரூ. 1000 முதல் ரூ. 1500 கோடி வரை முதலீடு செய்ய ராயல் என்பீல்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. உற்பத்தி திறனுக்கு ஏற்ப இந்த தொகையில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் தெரிகிறது. இந்த ஆலையில் ஐசி என்ஜின் உற்பத்தி பணிகள் நடைபெறும் என கூறப்படுகிறது.

வாகனங்கள் அறிமுகத்தை பொருத்தவரை ராயல் என்பீல்டு நிறுவனம் பல்வேறு புதிய மாடல்களை அறிமுகம் செய்ய திட்டமிட்டு வருவதாக தெரிகிறது. சமீபத்தில் ராயல் என்பீல்டு சூப்பர் மீடியோர் 650 மற்றும் இண்டர்செப்டார் / காண்டினென்டல் ஜிடி 650 மாடல்களின் அலாய் வீல் வெர்ஷனை மாடலை அறிமுகம் செய்தது. இந்த வரிசையில், ஷாட்கன் 650 மற்றும் ஹிமாலயன் 450 மாடல்கள் விரைவில் இணையும் என தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதன் முதல் யூனிட் வல்லம் வடகால் ஆலையில் இருந்து வெளியாகும் என கூறப்படுகிறது. செய்யாறில் உருவாகும் ஆலையை பயன்படுத்தி பெட்ரோல் வாகனங்களில் இருந்து எலெக்ட்ரிக் வாகன உற்பத்திக்கு படிப்படியாக மாற ராயல் என்பீல்டு திட்டமிட்டு இருப்பதாக கூறப்படுகிறது. •



வாசகர் கடிதம்

பேரன்புடையீர் வணக்கம்.

அன்புப் பாலம் ஏப்ரல் இதழ் பெற்றேன். இதயம் மிகக் களிப்புற்றேன்.

அட்டைப் படத்தில் அடிகளாசிரியரின் நினைவை உளமேந்தி உட்சென்றவுடன் தலையங்கம் கொடுத்த அறிவுரை காலத்திற்கு ஏற்றவகையில் பதிவைக் கொடுத்திருந்தது. "வாட்ஸ் அப் பகிர்வு மற்றும் யூ ட்யூப் ஆலோசனைகளுக்கு 'டாடா ' காட்டி உரிய மருத்துவரை அணுகுவது சிறப்பு" என்பது நூற்றுக்கு நூறு உண்மை. ஒன்றைப் பார்த்து மற்றொன்றைப் பார்த்தால் பட்டிமன்றம் நடத்தித்தான் சரியானதைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இழுபறிநிலை உள்ளது. உடல்நலம் மற்றிய உணர்வில் பட்டிமன்றம் நடத்த இடம்தருதல் நல்லதல்ல. இதைத் தலையங்கம் அறிவுரையாக வழங்கி இருப்பது உன்னதமானது.

அடிகளாசிரியரைப் பற்றிய பாலம் அய்யா அவர்களின் கண்ணோட்டம் எல்லோர் உள்ளத்தும் அடிகளாசிரியரின் உன்னதச் சிறப்பை ஆவணமாகப் பதிய வைக்கிறது. அத்துடன் இத்தகைய சான்றோர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் வாழ்வியல் சிறப்பையும் இக்காலத்து இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி இருப்பது பாலம் அய்யாவின் சமூக அக்கரையை வெளிப்படுத்துவதுடன், தமிழறிஞர்தம் புகழை தலைமேல் தூக்கிப் போற்றும் பண்பைப் பிறரும் பின்பற்ற வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

வடிக்கும் கவிதைகளும், வரைந்தளிக்கும் எழுத்துக்களும் அடிகளாசிரியரின் அரும்புகழை, பணிச்சிறப்பை, தவ வாழ்வை, தமிழ் உணர்வை, தமிழ்க்குடும்ப உன்னதத்தை முற்றிலும் எடுத்துக் காட்டிவிட முடியாது என்றபோதும் அன்புப் பாலம் ஏப்ரல் இதழ் வெளியிட்டு உள்ள எழுத்தாக்கங்கள் இன்றைய நிலை தமிழுள்ளங்களுக்கு ஏற்றமுறையில் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. குடிசையாக இருந்த கோவிலுக்குள் தங்கி இயற்றிய அவரது தவவாழ்க்கையும், தமிழ்ப்பணி வாழ்க்கையும், தமிழே உயிர்மூச்சாய்க் கொண்ட குடும்ப வாழ்க்கையும் நன்கு புலப்படுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர்கள் தொடங்கி முதல்நிலை அதிகாரிகள் உள்ளிட்ட பலரின் மனம் நெகிழும் பாராட்டுரைகள் ஆங்காங்கே வெளியிடப்பட்டிருப்பது புகழ்மகுடத்தில் நல் அணிகளாக மிளிர்கின்றன. அடிகளாசிரியரின் படைப்புக்கள் ஆங்காங்கே வெளியிட்டிருப்பது அவரைப் பற்றி முழுமையாக அறியாத பலருக்கு முன்னுரைகளாக அமைந்துள்ளன. அவரோடு பழகிய பலரின் அனுபவங்கள் அவரை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றன. பல்கலைக் கழகமாக விளங்கும் அவர்தம்

குடும்பத்து உறவுகள் வரைந்த உணர்ச்சி எழுத்துக்கள் உன்னதமானவை. உத்தமர் காந்தி அவர்களின் மறைவு குறித்து அடிகளாசிரியர் இயற்றிய துன்பமாலை படிக்கும் போது கண்களில் நீர் துளிர்க்கச் செய்கிறது. அடிகளாசிரியர் பற்றிய படைப்புகள் பற்றி மட்டுமே சொல்லிக் கொண்டு சென்றால் அதற்கென இன்னோர் இதழ் வேண்டும் என்ற விரிவஞ்சி அதனை விடுத்து அவரது தமிழ்ப்பணிக்குத் தலைவணங்கின்றேன்.

சிறப்பிதழ் என்றாலும் முழுமையும் அந்தச் செய்திகளையே நிறைத்து விடாமல் இதழுக்கே உள்ள உத்திகள் மிகச்சிறப்பாகக் கையாளப்பட்டிருக்கிறது. கவிஞர் மு.மேத்தாவின் கேள்வி பதில் பகுதி, சேலம் சங்கர் எம்.ஏ அவர்களின் வில்லுப்பாட்டு,யானைப்பாகன் பொம்மன், தமிழகத்தின் எல்லோரா. பாலிவுட் நடிகர் வினோத்கண்ணா பற்றி அரிய தகவல்கள், அருவிப் பதிப்பகத்தின் சிந்தனைச்சாரல், கலைமுத்துக் களஞ்சியம் ஆகியவை அந்த உத்திச் சிறப்பில் உயர்தரம்.

தெய்வ தரிசனம் சிறுகதை வழக்கு நடையில் அமைந்து தொடர்ந்து படிக்கத் தூண்டியது. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இனிய பண்பை வெளிப்படுத்திக் காட்டியது. வெளிவந்திருக்கம் ஐந்து கவிதைகளும் தரமான கருத்தும் உயர்வான வெளிப்பாடும் கொண்டிருந்தன. அவற்றுள் என் கவிதை ஒன்றும் இணைந்திருப்பது நன்றி கூற நல்ல வாய்ப்பு.

இலக்கியப் படைப்புகளாகவே இருந்து சிறப்பு சேர்ப்பினும் செய்திகள் இடம்பெற வேண்டும் என்று படங்களுடன் செய்திகள் வெளியாகி இருப்பது. குறிப்பிடத் தக்கது.

பட்டாளமாகப் பணியாளர்களை வைத்துக்கொண்டு வெளியிடப்படும் இதழ்களுக்கு ஈடான தரமும் வடிவமைப்பும் கொண்டு இந்த இதழ் மிளிர்வது பொறுப்பாசிரியரின் ஆழ்ந்த ஈடுபாட்டு உணர்வை எடுத்துக் காட்டுகிறது.

அன்புப் பாலம் இதழ் தன் பயணத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வாசகர் உலகமும், வள்ளல்கள் உலகமும் துணை நிற்க வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீரை. அத்திப்பூ
சே. அப்துல் லத்தீப்



அன்புப்பாலத்தின்
ஏப்ரல் மாத இதழ்
அடிகளாசிரியர் சிறப்பிதழ்

கவிதையைக் கொட்டியும்
நினைவலைகளைக் கட்டியும்
வந்தக் கதம்பம்
இவ்வன்புப்பாலம்

முப்பது காதையில்
அடிகளாசிரியருக்காக
ஒரு காவியம் விரைவில்
அரங்கேறுகிறது
அது சிலப்பதிகாரம்
இது சிறப்பதிகாரம்

புதுகக்கவிதையின் தாத்தா
முகமது மேத்தாவின்
கேள்வி பதில்

சிந்தைக்குள் நிற்கும்
சிந்தனைச் சாரல்

ஆஸ்கார் நாயகன் பொம்மன்
பொதுநல விழிப்புணர்வு
ஆகியன அடங்கிய கருத்துணவு
அதுவே பாலத்தின் பொறுப்புணர்வு

நௌவின்

சரவணா செல்வரத்னம்
ஜுவல்லரி

SARAVANA SELVARATHNAM RETAIL Pvt. Ltd.

14. ரங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை 17. Tel : 044 24347710 / 24355770
130, உஸ்மான் ரோடு (பனகல் பார்க் எதிரில்) தி.நகர், சென்னை 17. Tel : 044- 2814 4777

JEWELLERY

உலகிலேயே மிக குறைந்த சேதாரம் என்று சவால் விடுகிறோம்

0% to 3%
சேதாரம் / WASTAGE

NO MAKING CHARGES
செய்கூலி இல்லை

BIS
916 Hallmark Jewellery

Lowest Price! Latest Designs! Largest Collections!

TEXTILES

- Silk Sarees
- Sarees
- Fancy Sarees
- Ladies Readymades
- Blouse Materials
- Chudi Materials
- Cell Phones
- Toys
- Provisions
- Cosmetics
- Fancy Jewellery
- Gents Readymades
- Suiting & Shirting
- Dhothies
- Watches
- Games items
- Fruits & Vegetables

VESSELS

Al type Home Appliances
Marriage Function
Vessels & Electronic items
Toys, Games
Sports items
Furniture varieties
Unbelievable Price!!!

33, Natesan Street,
T.Nagar, Chennai - 17.
Tel : 044 -2433 8777

SWEETS

Taste and Delicious
Indian Sweets & Snacks
Party orders are undertaken
Branches
AVADI MYLAI T.NAGAR

WATER

100% Purified, Ooziness,
U.V. treated Hygienic
Packaged Drinking Water

20 ltr. Rs. 25.00 Tel : 044-6541 9777

EXCHANGE YOUR OLD 916 GOLD JEWELLERY TO NEW BIS HALLMARK JEWELLERY WITHOUT WASTAGE IN WEIGHT

MONTHLY GOLD SAVING SCHEME (CHIT) RS. 50/- TO RS. 5000/-
SCHEME BENEFICIARY :- 12.5% Interest for your money
(2 installments extra) at the time of completion.

75, Usman Road, T.Nagar, Chennai - 17 **044-2433 5777** • #39, Ranganathan St., T.Nagar, Chennai - 17 **044 -2433 8777** • #132, Usman Road, T.Nagar, Chennai - 17 **044 -2814 0323**
www.saravanaselvarathnam.co.in

POSTAL REGISTERED NO. TN/CC(S) DN. /336/2019-21 ANBUPAALAM (TAMIL MONTHLY) RNI NO. TN TAM/ 2007/25837
Licensed To Post Without Prepayment Under WPP No: TN/PMG(CCR)/ WPP-197/2019-21 Date of Publication 15th of Every Month

இந்தியாவின் No.1 டீலர்

வசந்த் & கோ

தரம் • நம்பிக்கை

வசந்த் & கோ

•சோழிங்கநல்லூர் •புரசைவாக்கம் •தி.நகர் •தி.நகர் •தி.நகர் •தி.நகர் •சைதாப்பேட்டை •சின்னமலை •சூளைமேடு •போரூர்(காரப்பாக்கம்) •பாடி •ராயபுரம் •கொளத்தூர் •புரசைவாக்கம் •வண்ணாரப்பேட்டை •மயிலாப்பூர் (லஸ் கார்னர்) •வேளச்சேரி (பைபாஸ் ரோடு) •அடையார் •உள்ளகரம் •நங்கநல்லூர் (மார்கெட்) •தாம்பரம்- சண்முகம் ரோடு •மேற்கு தாம்பரம் •செங்கல்பட்டு •திருவள்ளூர் •மதுரை •மதுரை •மதுரை •மேலூர் •காரைக்குடி •இராமநாதபுரம் •சிவகாசி •திண்டுக்கல் •தேனி •கம்பம் •பழனி •கோயம்புத்தூர் - 100 அடி ரோடு •கோயம்புத்தூர் - ஒப்பனக்கார தெரு •கோயம்புத்தூர் - க்ராஸ் கட் ரோடு •பொள்ளாச்சி •ஈரோடு •கோபிசெட்டிபாளையம் •சத்தியமங்கலம் •திருச்சிராப்பள்ளி •பெரம்பலூர் •கரூர் •புதுக்கோட்டை •பட்டுக்கோட்டை •திசையன்விளை •வள்ளியூர் வசந்த் & கோ, திருமண மண்டபம் •சங்கரன்கோவில் •பாளையங்கோட்டை •தூத்துக்குடி •கோவில்பட்டி •கருங்கல் •நாகர்கோவில் - மத்தியாஸ் வார்டு அருகில் •நாகர்கோவில் - வடசேரி பஸ் ஸ்டாண்டு ரோடு •மார்த்தாண்டம் •தர்மபுரி •சேலம் •சேலம் •ஆத்தூர் •நாமக்கல் •கோபிசெட்டிபாளையம் •கள்ளக்குறிச்சி •விருத்தாசலம் •விழுப்புரம் - திருச்சி மெயின் ரோடு •விழுப்புரம் - ஹாஸ்பிடல் ரோடு •பண்ருட்டி •கடலூர் •திண்டிவனம் •ஆரணி •வேலூர் - இந்தியன் வங்கி எதிரில் •வேலூர்- ஆற்காடு ரோடு •குடியாத்தம் •பாண்டிச்சேரி •திருப்பூர் •கும்பகோணம் - முராரிஸ் ஜிஜி டவர் •கும்பகோணம் - மோதிலால் தெரு •தஞ்சாவூர் •பட்டுக்கோட்டை •ஓசூர்: 86-A, தாலுகா ஆபீஸ் ரோடு •பெங்களூர் (வால் பாக், சாந்தி நகர் பஸ் ஸ்டாப் அருகில்) •மயிலாடுதுறை

Helpline: 044-42444444 (9.00 a.m. to 9.00 p.m.)